# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2024 ஆகஸ்ட் 16-31 தொகுதி 23 இதழ் 2 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


# 2024 ஆகஸ்ட் 9 : கொள்ளையர்களே வெளியேறு!

## மாணவர்கள் நாடாளுமன்றம் நோக்கி பேரணி



# தோழர் மனோஜ் மன்சிலுக்கு வரவேற்பு



பொய்யான வழக்கில் சட்டப்பேரவை உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டு ஆறு மாத சிறை வாசத்துக்குப் பிறகு விடுதலை அடைந்துள்ள தோழர் மனோஜ் மன்சிலுக்கு வரவேற்பு நிகழ்ச்சி. கட்சியின் மூத்த தலைவர் ஸ்வதேஷ், அவிகிதொச தேசிய பொதுச் செயலாளர் திரேந்தர் ஜா, பிகார் சட்டப்பேரவை உறுப்பினர் சத்யதேவ் ராம் உள்ளிட்ட தலைவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## ஆகஸ்ட் 9:
## ஏஐசிசிடியு: நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்





வெள்ளையனே வெளியேறு இயக்க நாளான ஆகஸ்ட் 9 அன்று ஒன்றிய அரசின் மூன்று குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெறக்கோரியும் நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைத் திரும்பப் பெறக் கோரியும் நீட் தேர்வு உள்ளிட்ட மக்கள் விரோதக் கொள்கைகளை ஒன்றிய அரசு கைவிடக் கோரியும் அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சில் சார்பாக நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நெல்லையில் ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் த.சங்கரபாண்டியன், மாநில துணைத் தலைவர் ஜி.ரமேஷ், இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜ், ஏஐசிசிடியு மாவட்ட பொதுச் செயலாளர் கணேசன் வண்டலூரில் மாநில சிறப்புத் தலைவர் சொ.இரணியப்பன், மாநிலச் செயலாளர் அதியமான், மாவட்ட பொதுச் செயலாளர் பாலாஜி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆபிரகாம், தினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அகில இந்திய மாணவர்கள் கழகம்: பாராளுமன்ற பேரணி

நீட் உள்ளிட்ட தேர்வுகள் நடத்தும் தேசிய தேர்வுகள் முகமையை (NTA) கலைத்தல், கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோருதல் மற்றும் தேசிய கல்விக் கொள்கையை (NEP) திரும்பப் பெறுதல், மையப்படுத்தப்பட்ட தேர்வு முறைகளை ரத்து செய்தல் ஆகியவற்றை வலியுறுத்தி, ஆகஸ்டு 9இல் அகில இந்திய மாணவர் கழகம் (AISA) சார்பில் டில்லியில் பாராளுமன்றம் நோக்கி நூற்றுக்கணக்கான மாணவர்கள் அணிவகுத்தனர். பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். ஒன்றிய அரசின் காவல்துறை பேரணியை தடுத்து நிறுத்தியது. எனவே, பாராளுமன்ற வீதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீட் நுழைவுத் தேர்வு ஊழல் தொடர்பான வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. சிபிஐஎம்எல் பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜாராம் சிங், சுதாமா பிரசாத் ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டு மாணவர்கள் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

2024 ஆகஸ்ட் 16-31

தொகுதி 23 இதழ் 2



முதன்மை ஆசிரியர்

சங்கர்.வீ

ஆசிரியர்

ஜி.ரமேஷ்

ஆசிரியர்குழு

பழ.ஆசைத்தம்பி

பாலசுந்தரம்

அ.சந்திரமோகன்

கே.ஜி.தேசிகன்

மேலாளர்

சொ.இரணியப்பன்



**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு



1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை – 23

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com


**தலையங்கம்**

# மோடி பேசும் புதிய மதச்சார்பின்மை

78வது சுதந்திர நாள் அன்று டெல்லி செங்கோட்டையில் 11வது முறையாக பிரதமர் மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து மிக நீண்ட உரையாற்றினார். 98 நிமிடங்கள் பேசினார். மோடி கடந்த 10 ஆண்டுகளாக பேசி வந்த "ஒரே நாடு, ஒரே தேர்தல்" திட்டத்தையும் "பொது சிவில் சட்டத்தையும்" வேறு வார்த்தைகளில் மீண்டும் வலியுறுத்திப் பேசியுள்ளார். "ஒரே மதம், ஒரே மொழி" என்பதை இம்முறை நேரடியாகச் சொல்லவில்லை. நாட்டில் அடிக்கடி தேர்தல் நடக்கிறது, 3லிருந்து 6 மாதத்திற்கு ஒருமுறை தேர்தல் நடக்கிறது இது நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது, எல்லா பணிகளும் தேர்தலோடு தொடர்புடையதாக இருக்கிறது, இதற்குத் தீர்வு ஒரே நாடு ஒரே தேர்தல் முறைதான் என்கிறார். அதற்காக நாடு முழுவதும் கலந்து ஆலோசித்துவிட்டார்களாம். எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் கருத்துகளை தந்துவிட்டார்கள் என்கிறார். ஆனால், எத்தனை கட்சிகள் இந்த ஒரே நாடு ஒரே தேர்தல் முறைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன என்று அவர் சொல்லவில்லை. சொல்லவும் மாட்டார். ஏனென்றால், பாஜகவும் அதன் கூட்டாளிகளில் சிலவும் தவிர வேறு எந்தக் கட்சிகளும் இந்திய ஜனநாயகத்திற்கு எதிரான இந்த முறைக்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள். அடுத்து நாட்டில் மதச்சார்பற்ற சிவில் சட்டத்தைக் கொண்டு வரும் நேரம் வந்து விட்டது என்கிறார். இது நாள் வரை அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர், அவர்களின் ஒரே மதம் கோட்பாட்டிற்கு இப்போது புதிய வார்த்தைப் போடுகிறார். கடந்த 75 ஆண்டுகளாக வகுப்புவாத சிவில் சட்டத்தைப் பின்பற்றி வந்துள்ளோம், தற்போது நடைமுறையில் உள்ள சிவில் சட்டம் வகுப்புவாத சிவில் சட்டம் என்று சமூகத்தில் பெரும்பான்மையோர் நம்புகிறார்கள், அது நாட்டை மத ரீதியாகப் பிரித்து சமத்துவமின்மையை ஊக்குவிக்கிறது. அதனால் மதச் சார்பற்ற சிவில் சட்டம் கொண்டு வருவதற்கான நேரம் வந்து விட்டது என்கிறார். இந்திய நாட்டின் அரசமைப்பு சட்ட முகவுரையில் மதச்சார்பின்மை என்ற வார்த்தையை நீக்க வேண்டும் என்று சொன்னவர்கள், இந்த நாடு இந்துக்களுக்கானது, இங்கிருக்கும் இஸ்லாமியர்கள் பாகிஸ்தானிற்குப் போய்விடுங்கள் என்றவர்கள் மதச் சார்பின்மை சட்டம் வேண்டும் என்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு மற்றும் மதச் சிறுபான்மையினருக்கு என அவர்களின் வாழ்வியல் முறைகளைப் பின்பற்றவும் இந்துத்துவ சாதிய கொடுமைகளுக்கு முடிவு கட்டும் நோக்கத்துடனும் அம்பேத்கரால் அரசமைப்புச் சட்டமும் பல்வேறு சட்டங்களும் உருவாக்கப்பட்டன. அம்பேத்கர் உருவாக்கிய சட்டங்களை, அரசியலமைப்புச் சட்டங்களை அழித்தொழிக்க வேண்டும் என்று வெளிப்படையாகவே பேசுகிறார் மோடி. ஆங்கிலேயர் காலத்துச் சட்டங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, தண்டனைக்குப் பதிலாக நீதி என்று சொல்லி மிகக் கொடூரமான குற்றவியல் சட்டங்களை அமல்படுத்தியுள்ளதுபோல், மதச் சார்பற்ற சட்டம் என்ற பெயரில் ஒரே மதம் ஒரே சட்டம் என்று கொண்டு வர, தனிப் பெரும்பான்மை இல்லாதபோதும் தைரியமாகப் பேசுகிறார். இந்திய சுதந்திரப் போருக்கும் இந்த சங் பரிவார் கூட்டத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. ஆனால், 40 கோடி மக்கள் சுதந்திரத்திற்காகப் போராடினார்கள், இப்போது 140 கோடி பேர் இருக்கிறோம். 2047ல் வளர்ச்சியடைந்த நாடாகி விடுவோம் என்கிறார். இந்தியாவில் உள்ள சிறுபான்மையினரின் குறிப்பாக இஸ்லாமியரின் வாழ்க்கையை அழிக்க புதுச் சட்டங்களைக் கொண்டு வருகின்ற, வக்பு வாரியச் சொத்துகளை சட்டத் திருத்தத்தின் மூலம் அபகரிக்க நினைக்கின்ற மோடி, வங்க தேசத்தில் உள்ள இந்துக்கள் மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்பு பற்றி இந்திய மக்கள் அக்கறை கொண்டுள்ளார்கள் என்கிறார். வங்க தேசத்தில் இந்துக்கள் தாக்கப்படுவதாகச் சொல்லி, இந்தியாவில் இஸ்லாமியர்கள் மீது தாக்குதல் நடத்திடத் திட்டமிடும் சங்கிகளின் எண்ணத்தை பிரதிபலிப்பதாகவே இந்திய பிரதமரின் பேச்சும் இருக்கிறது. இது மிக மிக ஆபத்தானது. மைனாரிட்டி அரசு என்றாலும், தங்களுடைய ஆர்எஸ்எஸ் திட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டுள்ள மோடி அரசை அண்டை நாடுகளைப் போலவே மக்கள் போராட்டங்கள் விரைவில் வீழ்த்தும்.

# செபி தலைவர் பதவி விலக வேண்டும்; அதானி மோசடியை உச்ச நீதிமன்றம் மறு விசாரணை செய்ய வேண்டும்.

18 மாதங்களுக்கு முன்பு அதானி மோசடி குறித்த ஹிண்டன்பர்க் புலனாய்வின் முதல் அறிக்கை இந்த உலகைக் குலுக்கியது. அதனுடைய இரண்டாவது அறிக்கையோ சில வழிகளில் அதையும் விட மேலும் கூடுதலான அதிர்ச்சி தருவதாக உள்ளது. அந்த முதல் அறிக்கை அதானி குழுமத்தால் நிகழ்த்தப்பட்ட மாபெரும் கார்ப்பரேட் மோசடியை அம்பலமாக்கியது. மேலும் உலகின் பெரும் செல்வந்தர்களின் வரிசையில் இருந்து கௌதம் அதானியைக் கீழே தள்ளியது. இந்திய நாடாளுமன்றம் உட்பட இந்தியா முழுவதிலும் இருந்து மோடி–அதானி பிணைப்பு குறித்து கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன. இதற்கு எதிர் வினையாக அதனை தொந்தரவுக்குள்ளாக்கிய ஒவ்வொரு கேள்வியையும் இந்த ஆட்சி மௌனமாக்க விரக்தியுடன் முயற்சித்தது. அதற்காக மிகவும் வெளிப்படையாக பதில்களைக் கோரிய எம்பிக்களை தகுதி நீக்கம் செய்வது, வெளி யேற்றுவது, கைது செய்வது வரைக்கும் கூட சென்றது. அம்பானியும் அதானியும் காங்கிரசுக்கு கருப்புப் பணத்தை வாரி வழங்குகிறார்கள் என அவருடைய விரக்தி மிகுந்த தேர்தல் உரையொன்றில் வாய்தவறி குற்றம் சுமத்தும் வரையிலும் அதானி குறித்து மோடி ஒரு வார்த்தை கூட கூறவில்லை.

சட்டத் தளத்தில் அதானி குழுமத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள கார்ப்பரேட் மோசடி குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை, உச்சநீதிமன்றத்தால் ஒரு நிபுணர் குழுவிற்கும், சந்தையை கட்டுப்படுத்தும் நிறுவனமான செபிக்கும் (இந்திய பங்குகள், பரிவர்த்தனை வாரியம்) கடந்த ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டது. ஆகஸ்ட் 25, 2023 அன்று உச்ச நீதிமன்றத்தில் செபி பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்திருந்தது. அதன்படி 24 விசாரணைகளில் இரண்டு இன்னும் முடிவுக்காக காத்திருக்கிறது. ஆக, தற்போது இந்த இரண்டாவது ஹிண்டன்பர்க் அறிக்கை செபி தலைவர் மாதவி பூரி புச், அவருடைய கணவர் தாவல் புச் குறித்து காத்திரமான கேள்விகளை எழுப்புகிறது. அதன் காரணமாக இந்த ஒட்டுமொத்த விசாரணையின் நம்பகத்தன்மையும் பெரும் சந்தேகத்திற்குரியதாகிறது. அண்மைய இரண்டாம் ஹிண்டன்பர்க் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள சட்டவிரோத பரிமாற்றத்தை அம்பலப்படுத்துபவர் (whistleblower) கொடுத்த ஆவணங்களின்படி, பண மோசடி செய்வதற்காக அதானி குழுமத்தால் மேலாண்மை செய்யப்படும் பெர்முடா, மொரிசியசை தளமாகக் கொண்டு இயங்கும் கடல்கடந்த நிறுவனங்களில் மாதவி, தாவல் புச் இருவருக்கும் பங்குகள் உள்ளன.

ஆகஸ்ட் 10 இல் ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியான பிறகு, மாதவி, தாவல் புச் இருவரும் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஹிண்டன்பர்க் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அடிப்படை உண்மைகளை அவர்களது பதிலுரை உறுதி செய்கிறது. மேலும் அவர்களது விளக்கமானது அளித்த பதில்களை விட அதிக கேள்விகளையே எழுப்பியிருக்கிறது. அது மாதவி புச்சால் அமைக்கப்பட்ட சிங்கப்பூர், இந்திய நிறுவனங்களான சிங்கப்பூர் அகோரா பார்ட்னர்ஸ், அகோரா அட்வைசரி லிமிடெட் (இந்தியா) ஆகியவற்றின் இருத்தலை உறுதியும் செய்கிறது. மேலும் செபியின் அண்மைய சில முறைப் படுத்தல்களால் பயன்பெற்ற, உலகளாவிய தனியார் பங்கு நிறுவனமான பிளாக்ஸ்டோன்உடன் தாவல் புச்சின் தொடர்புகளையும் அது உறுதி செய்துள்ளது. அடிப்படை உண்மைகள் அனைத்தும் ஆதாரங் களைக் கொண்டுள்ளபோது, ஹிண்டன்பர்க் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவற்றை 'தீய எண்ணம் கொண்டது, கெடு நோக்குடையது' எனக் கூறி புச் குடும்பமும் செபியும் அவற்றை உதறித் தள்ளுவது சரியானதல்ல.

இந்தக் குற்றச்சாட்டுகள் முழுமையாக விசாரணை செய்யப்பட வேண்டும்.செபியின் தலைவர் பதவியில் இருந்து மாதவி பூரி புச் பதவி நீக்கம் செய்யப்படுவதுவே தெளிவான முதல் நடவடிக்கையாக இருக்க முடியும். உச்ச நீதிமன்றத்தில் செபி தாக்கல் செய்த பிரமாணப் பத்திரம் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். செபியால் விசாரணை நடத்தப்பட்ட 22 வழக்குகளும் உச்ச நீதிமன்றத்தால் மறுதிறப்பு செய்யப்பட வேண்டும். இந்த ஒட்டுமொத்த விசாரணைக்கும் இறுதி அதிகாரம் படைத்த அமைப்பு செபிதான் என

உச்ச நீதிமன்றம் கூறியது. இருப்பினும் உச்ச நீதிமன்றத்தால் நீட்டிக்கப்பட்ட கால அவகாசம் முடிந்த பிறகும் கூட இந்த விசாரணை முடிவு பெறாமலேயே இருக்கிறது. அதானி குழுமம் குறித்த முதல் ஹிண்டன்பர்க் அறிக்கை அதானி பங்குகளின் பெரும் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. அதனால் பல சில்லறை முதலீட்டாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்த இரண்டாவது அறிக்கை அதானி குழுமத்திற்கு எதிராக புதிய குற்றச்சாட்டுகள் எதையும் எழுப்பாத போதிலும் கூட, பத்து ஒருங்கிணைந்த அதானி பங்குகளின் ஒருங்கிணைந்த சந்தை மதிப்பில் ரூ.53,000 கோடி இழப்புக்கு அது வழிவகுத்துள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அறிக்கை அதானி குழுமத்தை விட அதிகமாக செபியின் நம்பகத்தன்மையையும், இந்திய பங்கு சந்தையில் முதலீட்டாளர்களின் நம்பிக் கையையும் தெளிவாகவே பாதித்துள்ளது. மேலும் இந்த செபி–அதானி இடையேயான தொடர்பு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே வளர்ந்து வந்திருக்கலாம். செபியின் முந்தைய தலைவர் திரு.யுகே சின்ஹா தற்போது அதானிக்கு சொந்தமான என்டிடிவியின் நிர்வாகப் பொறுப்பற்ற தலைவர் பதவியில் இருக்கிறார் என்பதையும் நாம் மறந்து விடவில்லை. செபியின் முன்பு அனைத்து அத்தியாவசியமான தகவல்களையும் தாங்கள் வெளிப்படுத்திவிட்டதாக மாதவி, தாவல் புச் இருவரும் நம்மிடம் கூறிய போதும், அதானிக்கு தொடர்புடைய கடல் கடந்த நிதிகளில் செபியின் தலைவர் முதலீடு செய்த வரலாறு கொண்டிருக்கிற போது, அவரது கணவர் பன்னாட்டு பங்கு நிறுவனம் ஒன்றின் மூத்த ஆலோசகர் என்ற அளவில் 'இந்தியத் தொழில் துறையின் முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளர்களுடன்' தொடர்ந்து தொடர்பில் இருக்கிறார் என்ற அந்த உண்மையே செபியின் செயல்பாடுகள் மீது எவ்வித நம்பிக்கையையும் நிச்சயமாக ஏற்படுத்தவில்லை.

மோடியின் காலத்தில் யுபிஎஸ்சி (ஒன்றிய அரசு தேர்வாணையம்) முதல் தேர்தல் ஆணையம், செபி வரையிலும் ஒவ்வொரு நிறுவனமும் சமரசத் திற்குள்ளாக்கப்பட்டுள்ளது; கைப்பற்றப் பட்டுள்ளது. அதேவேளையில் ஒவ்வொரு புலனாய்வு நிறுவனமும் எதிர்க்கட்சி களுக்கு எதிராக ஆயுதபாணியாக்கப்பட்டுள்ளது. முடிவுகள் வெளிப்படையாக தெரியும் போது, அது இந்திய ஜனநாயகத்தின் நொறுங்கக் கூடிய நிலையாகவோ, அதிகரிக்கும் பட்டினி, வீழ்ச்சியுறும் ஊடக சுதந்திரம் அல்லது மோசடியான கார்ப்பரேட் நிர்வாகம் என நிகழ்வுகள் எதுவாக வேண்டு மானாலும் இருக்கலாம்; அத்தகைய நிகழ்வுகளின் இழிவான நிலை கண்டு இந்த உலகம் விமர்சிக்கத் தொடங்கும் போது, அதனை சதி வேலையெனக் கூப்பாடு போட்டு இந்த ஆட்சி நசுக்க முயற்சிக்கிறது! அதிகரித்து வரும் இந்தியாவின் பொருளாதார சீரழிவுக்கு நிச்சயமாக ஹிண்டன்பர்க் மீது பழி சுமத்த முடியாது, ஏனென்றால், அரசாங் கத்தின் சொந்த பொருளாதார ஆய்வறிக்கையே அதை ஏற்றுக் கொண்டுள்ளது. மோடி காலத்தில் நட்புசார் முதலாளித்துவத்தின் அதிர்ச்சிகரமான வளர்ச்சியில் செபியும் கூட உடந்தையாக இருக்கிறதென்றால், இந்த மோசடியின் அடியாழம் வரை சென்று பார்த்து இதற்கு பொறுப்பானவர்கள் நீதியின் முன்பு நிறுத்தப்பட வேண்டும் என்பதே இந்தியப் பொருளாதாரம், இந்திய மக்களின் நலன் சார்ந்ததாக இருக்க முடியும்.

எம்எல் அப்டேட் 13–19 ஆகஸ்ட் 2024

**தமிழாக்கம் – செந்தில்**


## மக்களுடன் ஐக்கியப்படுங்கள் – மாவோ

பொதுவுடைமையாளர்களாகிய நாம் விதைகளைப் போன்றவர்கள். மக்கள் மண்ணிற்கு நிகரானவர்கள். நாம் எங்கெல்லாம் செல்கிறோமோ அங்கெல்லாம் நாம் மக்களுடன் ஐக்கியமாகி, வேர் பிடித்து அவர்களிடையே மலர வேண்டும். எங்கெல்லாம் நமது தோழர்கள் செல்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்கள் மக்கள் திரளினருடன் நல்லுறவுகளை உருவாக்க வேண்டும். அவர்களைப் பற்றிய அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தமது இடையூறுகளைக் கடப்பதற்கு உதவ வேண்டும். நாம் மக்கள் திரளினருடன் ஐக்கியப்பட வேண்டும். எவ்வளவு அதிகமாக மக்கள்திரளினருடன் நாம் ஐக்கியப்படுகிறோமோ அவ்வளவுக்கு மிகவும் நல்லது. நாம் மக்கள் திரளினரை ஒன்றுதிரட்ட அனைத்து முயற்சிகளும் செய்தல் வேண்டும்.

(மாசேதுங் தெரிவு நூல்கள், பாகம் 4, பக்கம் 58)

# எங்களின் அணுகுமுறை மக்களை மையப்படுத்தி நிற்பதாகவே எப்போதும் இருந்தது

(சிபிஐ எம்எல் கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர் சிறப்புப் பேட்டி பிடிஐ யின் 4 நாடாளுமன்றத்தெரு பேட்டி ttps://youtu.be/lLnosZxjpXw தமிழாக்கம்: மதிவாணன்)




**....மற்ற இடதுசாரி கட்சிகளுடன் ஒப்பிடும்போது உங்கள் அணுகுமுறை எவ்வாறு மாறுபட்டதாக இருக்கிறது?**

*(சென்ற இதழ் பதிலின் தொடர்ச்சி)*

சுதந்திரமான இடது கட்சியாகச் செயல்பட்டு, சில பிரச்சனைகளில் (இடது முன்னணி) அரசுக்கு ஆதரவாகவும் செயல்பட்டோம். சில பிரச்சனைகளின் தன்மையை ஒட்டி இடது முன்னணியோடு ஒத்துப்போகாமல் முரண்பட்டோம். சிங்கூர், நந்திகிராமம் பிரச்சனையோடு வங்கத்தில் சரிவு துவங்கியது. ஆனால், எப்படி அதிலிருந்து மீள்வது என்பதை முறையாகக் கையாளவில்லை. அனேகமாக, அவர்கள் மேற்கு வங்கத்தில் பெற்ற வெற்றியின் தன்மையும், நீண்ட காலமாக வெற்றிமுகத்தில் அவர்கள் இருந்ததும் , அவர்கள் தோல்வியிலிருந்து திரும்புவதை மிகுந்த சிரமமாக்குகிறது போலும்.

ஆனால், கேரளாவில் நிலைமை வேறு. அங்கே ஒவ்வொரு தேர்தலிலும் மாற்றி மாற்றி அரசாங்கங்கள் அமைந்தன. ஆனால், இந்த முறை தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் கேரளாவும் வங்கத்தின் வழியில் செல்லாது என்று நினைக்கிறேன். திரிபுராவும் கூட வங்கத்தைப் போன்றே உள்ளது. அங்கே இடதுசாரிகளை பிஜேபி முந்திச் செல்கிறது. இடதுசாரிகள் மீண்டு வருவது கடினமானதாக இருக்கிறது.

அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்களின் கொள்கைகளின் பெரும்பகுதி அதிகாரத்தை மையமாகக்கொண்டவையாக மாறிவிட்டது. அவர்கள் கேரளாவில், என் நினைவு சரியென்றால், 1957ல் துவங்கினார்கள். அவர்களின் ஆட்சியை நீடிக்க விடாது செய்துவிட்டனர். அதுபோன்ற ஒன்றுதான், 1960களின் நடுப்பகுதியில் அல்லது 67ல் இரண்டாவது முறையாகவும் நேர்ந்தது. நீண்ட காலம் ஆட்சி நடத்த முடியவில்லை. எனவே, அரசாங்கம் நிலையான ஒன்றாக இருப்பது சிபிஐ எம்முக்கு முக்கியமான ஒன்றாக மாறிவிட்டது என்று நினைக்கிறேன். மேற்கு வங்கத்தில் இருந்த நிலைமைகள் காரணமாக அவர்கள் நீண்ட காலம் ஆட்சி செய்யவும் முடிந்தது. இப்படியாக, ஆட்சியில் இருப்பது முதன்மையானதாகவும், போராட்டங்கள் இரண்டாம் பட்சமாகவும் அவர்களுக்கு மாறிவிட்டது.

உதாரணமாக சிங்கூர் நந்திகிராம் பிரச்சனையைப் பாருங்களேன். சமூகத்தை உற்று நோக்கும் யாருக்கும், பெரிய தொழில் ஒன்று வரும் என்பதற்காக நிலத்தைக் கையகப்படுத்துவது என்ற கருத்தை விவசாயிகள் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொள்வதில்லை என்பது தெரிந்துவிடும். எனவே, கண்ணையும் காதையும் திறந்து வைத்திருக்கும் எந்தக் கட்சியும், தான் செய்த முடிவை மறு பரிசீலனை செய்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் எடுத்திருந்த முடிவை மாற்றிக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் தாங்கள் எடுத்த முடிவை உறுதியாகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். மக்கள் சொல்வது தவறு என்றும் தாங்கள் எடுத்த முடிவு சரியானது என்றும் கருதினார்கள்.

எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் எங்கேயும், ஒருபோதும் அதிகாரத்தில் இருந்ததில்லை. எங்கள் கட்சி மக்களைச் சார்ந்து நிற்பதாக இருக்கிறது. போராட்டங்களை நடத்தும் கட்சியாக இருக்கிறது. எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அழுத்தம் கொடுத்தாக வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஒரு நல்ல கொள்கை இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனை அமலாக்கக் கூட நெருக்கடி கொடுப்பது தேவையானதாக இருக்கிறது. உதாரணமாக நான் உங்களுக்குச் சொன்ன வாக்களிக்கும் உரிமையை எடுத்துக்கொள்ளுங்கள். அரசியல் சட்டத்தின்படி வாக்களிப்பு அடிப்படை உரிமையாகும். ஆனால், அது நடைமுறையில் இல்லை. எனவே, எந்த ஒரு உரிமையை நீங்கள் பெறுவதற்கும் போராடியாக வேண்டும். மக்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும் என்றால், வாழ்க்கையில் முன்னேற்றம் வர வேண்டும் என்றால், ஒவ்வொரு அங்குலத்திலும் போராடியாக வேண்டும்.

எனவே, எங்களின் அணுகுமுறை மக்களை மையப்படுத்தி நிற்பதாகவே எப்போதும் இருந்தது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், இதுதான் இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடாக இருந்தது. இருந்தபோதும், நாங்கள் முயற்சியெடுத்து எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குச் சேர்ந்து செயல்பட முயற்சிக்கிறோம். இப்போது, இந்தத் தருணத்தின் நிலைமை இதற்கு முன்பு இருந்தது இல்லை.

உதாரணமாக, இந்தியா கூட்டணி போன்ற ஒன்றை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு யோசித்துக் கூட பார்த்திருக்க முடியாது. தற்போது ஆர்ஜேடி கட்சியோடு நாங்கள் மேற்கொண்டுள்ள சரிக்கட்டல் பற்றியும் கூட 5 ஆண்டுகளுக்கு முன்பு யோசித்துப் பார்த்திருப்பது சாத்தியமில்லை. எனவே, இது காலத்தின் தேவை. எனவே, இடது தளத்திற்கு வெளியே உள்ள, கருத்தியல் ரீதியில் பல்வேறு வண்ணங்கள் கொண்ட கட்சிகளோடும் நாங்கள் ஊடாட முயற்சிக்கிறோம். இது எங்களுக்கு புதிய அனுபவம். இருந்தாலும், இந்த விஷயத்தில் ஐக்கியப்பட்ட இடதுகள் ஒரு மாறுபட்ட பாத்திரத்தை ஆற்றியாக வேண்டும். எனவே, நாங்கள் முயற்சி எடுப்போம். பிற இடதுசாரி கட்சிகளும் கூட மீண்டு வரக்கூடும் என்றும் நாங்கள் கருதுகிறோம். இடதுசாரிகள் 2004ல் நாடாளுமன்றத்தில் 60க்கும் மேற்பட்ட இடங்களைக் கொண்டிருந்தனர். அது இப்போது ஒன்பதாகச் சரிந்துவிட்டது. இது குறிப்பிடத்தக்கச் சரிவாகும்.

**நீங்கள் சரிவைப் பற்றி பேசினீர்கள். 60லிருந்து 9 என்பதாக, மிகவும் கீழே இறங்கிவிட்டது. கேரளாவில் சிபிஐஎம் வென்ற ஒரு தொகுதியைத் தவிர மற்ற அனைத்து இடங்களிலும் நீங்கள் உட்பட இடதுகள் அனைவரும் இந்தியா கூட்டணியில் உள்ள காங்கிரசையும் பிற கட்சிகளையும் சார்ந்துள்ளீர்கள். சார்ந்திருப்பது என்ன விதமான தாக்கங்களை, கருத்தியல் அடிப்படை உட்பட ஏற்படுத்தும் என்று நினைக்கிறீர்கள்?**

நான் அதனை சார்ந்திருப்பது என்று பார்க்கவில்லை. மாறாக ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது என்று பார்க்கிறேன். எங்களின் கூட்டணியில் உள்ளவர்கள் எந்த அளவு லாபம் அடைந்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு நாங்களும் பலன் பெற்றிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். உண்மையைச் சொல்லப் போனால், அவர்கள் கூடுதலான பலன்களைப் பெற்றுள்ளார்கள். தேர்தலில் வாக்குகள் ஒரு பக்கமாகக் குவிவது அதிகரித்துள்ளது. ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெறுவதற்கு 5 லட்சம் அல்லது 6 லட்சம் வாக்குகளைப் பெற வேண்டும். ஒரு சுதந்திரமான இடதுசாரி கட்சிக்கு 5 அல்லது 6 லட்சம் வாக்குகள் பெறுவது என்பது மிகவும் சிரமமான ஒன்றாக இருக்கலாம். அனேகமாக அது கேரளாவில் அல்லது எங்கள் கட்சிக்கு வேறு சில மாநிலங்களில் சாத்தியமானதாக இருக்கக் கூடும். எனவே, கூட்டணி உருவாக்குவது இந்த காலத்தின் தேவையாக இருக்கிறது, எல்லாக் கட்சிகளுக்கும் இப்போது அது தேவையானதாக இருக்கிறது. அது ஒரு நிரந்தரமான சார்பு நிலை என்று சொல்ல வேண்டிய அளவுக்கு இருக்கிறது. எனவேதான்,

இந்த காலகட்டத்தை முன்னெப்போதும் இல்லாத ஒன்று என்று குறிப்பிடுகிறேன். இந்தியா இதுபோன்றதொரு சூழலை இதற்கு முன்பு சந்தித்ததில்லை. எந்தவொரு கட்சியும், இடதுசாரி சோசலிசக் கட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, இதுவரை எழுந்திராத இந்த கேள்விக்கு வழக்கத்துக்கு மாறான பதில் ஒன்றைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

**கூட்டணி அமைப்பதும் எளிதான ஒன்றுதான். கூட்டணியில் உள்ளவர்கள் மையத்தில் உள்ளவர்களாகவோ அல்லது மையத்திற்கு இடது பக்கத்தில் உள்ளவர்களாகவோ இருக்கிறார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள்...**

கருத்தியல் நெருக்கத்தைக் காட்டிலும், அனேகமாக, ஒத்துப்போகும் சமூகத் தன்மை கூடுதலாக முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். உதாரணமாக, எங்களின் வலு அதிகமாக இருக்கும் பீகாரையும் ஜார்கண்ட்டையும் பாருங்களேன். எங்கள் கட்சி நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம்தான் வளர்ந்தது. அந்த பத்தாண்டுகளின்போது காங்கிரஸ் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே, அதுதான் அரசியலில் பிரதானமான நிலப்பிரபுத்துவ சக்தியாகவும் இருந்தது. எனவே, நாங்கள் காங்கிரசுக்கு மிகப் பலத்த அடிகளைக் கொடுத்தோம். இருந்தபோதும் எங்களுக்கு மிகப் பெரிய பலன் எதுவும் கிடைத்துவிடவில்லை. ஏனென்றால், நாங்கள் மிகவும் ஏழையான மக்கள் பிரிவினரின் பிரதிநிதியாக இருந்தோம். ஆனால், நாங்கள் அரசியல் நுழைவாயில் ஒன்றைத் திறந்துவிட்டோம். அதன் வழியே பிற கட்சிகள் உள்ளே நுழைந்தனர். உதாரணத்துக்கு ஜனதா தளத்தைச் சொல்லலாம். நீங்கள் 70களின் துவக்க காலத்தைப் பார்த்தீர்கள் என்றால், லாலு யாதவ் போன்றவர்கள் என்ன செய்தார்கள் என்று மக்கள் சொல்கிறார்களோ அதைத்தான் நாங்களும் செய்து வந்தோம். லாலு மக்களுக்காக குரல் கொடுத்தார் என்று மக்கள் சொல்லி வந்தார்கள். லாலு பீகார் மக்களுக்கு இதனைக் கொடுத்தார் என்று சொன்னார்கள். ஆனால், 70களில் அதே கீழ்த்தட்டு மக்கள் தங்களின் கௌரவத்துக்காக எங்களின் பதாகையின் கீழ் போராடிக்கொண்டிருந்தார்கள்; மனித உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடிக்கொண்டிருந்தார்கள். அதாவது, நடுத்தட்டு விவசாயப் பிரிவுகளை உள்ளடக்கிய சாதிகளைச் சேர்ந்த ஓபிசிக்களும் இபிசிக்களும் போராடிக்கொண்டிருந்தனர். எங்களின் அடித்தளமாக தலித்துகளும் இபிசிக்களின் ஒரு பிரிவினரும் இருந்தனர். இப்படியாக, சமூக ரீதியான பொருத்தப்பாடு இருந்தது. இவை ஒன்றுக்கு ஒன்று அனுசரித்துப் போகும் சமூகப் பிரிவினராக இருந்தனர். உதாரணமாக, ஆர்ஜேடியின் சமூக அடித்தளம் கடந்த சில ஆண்டுகளில் சுருங்கி வந்தது. மக்கள் இப்போது இரண்டு சமூகங்கள் அல்லது இரண்டு சாதிகள் என்று சொல்கிறார்கள். எனவே, ஒவ்வொருவரும் பலன் பெறும் விஷயத்தை நாங்கள் அரங்கிற்குள் கொண்டு வந்தோம். கருத்தியல் வார்த்தைகளில் சொல்வதானால், நீங்கள் அரசியல் சட்டத்தைக் காப்பாற்றுவீர்கள் என்றால் நீங்கள் யாராக இருந்தாலும் இந்தியா கூட்டணியில் இருக்க முடியும்.

உதாரணமாக சிவசேனா இந்தியா கூட்டணியில் இருக்கிறது. கருத்தியல் ரீதியில் பார்த்தால் மகாராஷ்டிராவின் சிவசேனா இந்துத்துவா கட்சியாக இருந்தபோதும், அது அரசியல் சட்டத்திற்கு அர்ப்பணிப்பு உள்ளதாக இருக்கும்வரை, ஜனநாயகத்தைக் காப்பதாக இருக்கும்வரை அது இந்தியா கூட்டணியில் இருப்பதில் பிரச்சனையில்லை. எங்களைப் பொருத்தவரை நாங்கள் மகாராஷ்டிராவில் பெரிய அளவில் இல்லை. எங்களுக்கும் அவர்களுக்கும் நேரடி ஊடாடலுக்கு வாய்ப்பில்லை. ஐக்கியத்துக்கான மைய கருத்தாக இருக்கும் அரசியல் சட்டத்தைக் காப்போம் என்பதில் ஒற்றுமை இருக்கும் என்றால் நாம் ஒன்றாக சேர்ந்து பணியாற்ற முடியும்.

தொடரும்...

மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!!

நன்கொடை தாரீர்!!!

மாதம் இருமுறை தனி இதழ் ரூ.10 : ஆண்டுச் சந்தா ரூ.200

# “இது விவசாயிகள் விரோத பட்ஜட், இளைஞர் விரோத பட்ஜெட், ஏழைகள் விரோத பட்ஜெட் மக்கள் விரோத பட்ஜெட்!”




2024–25 நிதிநிலை அறிக்கை மீது 25.07.2024 அன்று, நாடாளுமன்றத்தில் இகக (மாலெ) பீகார், மக்களவை உறுப்பினர் ராஜாராம்சிங் பேசியதின் சுருக்கம்

## விவசாயிகள், விவசாயம்

இந்த நிதிநிலை அறிக்கை மக்கள் விரோத மானது. விவசாயிகள் விரோதமானது. இளைஞர் விரோதமானது. ஏழைகள் விரோதமானது. விவசாயத்தை லாபகரமாக ஆக்கமுடியாமல் விவசாயிகள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 3.5% குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது! சி2+50% பரிந்துரைப்படி, விளைபொருளுக்கு சட்டபூர்வமான குறைந்தபட்ச ஆதரவு விலை முற்றிலுமாக மறுக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டுக்கு மேலாக நடைபெற்ற வீரமிக்க விவசாயிகள் போராட்டத்தில் உயிரிழந்தவர்கள் நினைவாக சிங்கு எல்லையில் நினைவுச்சின்னம் எழுப்பிட வேண்டுமென அரசை வலியுறுத்துகிறேன்.

## இளைஞர், வேலை வாய்ப்பு

நாட்டின் 50% இளைஞர்கள் வேலையில்லாமல் இருப்பதாக பொருளாதார ஆய்வறிக்கையே ஒப்புக்கொள்கிறது. பின் எதற்காக ஸ்கில் இண்டியா(திறன்மேம்பாட்டு திட்டம்)? ஒரு கோடி இளைஞர்களுக்குத் திறன் வளர்ப்புத் திட்டம் என்று சொல்லப்படுகிறது. இது மிகப் பெரிய ஏமாற்று, இதன்மூலம் 500 பெரும் நிறவனங்களே ஆதாய மடையும். அக்னிவீர் திட்டம் போலவே கம்பெனிவீர் திட்டத்தை திணிக்க அரசு விரும்புகிறது. அக்னிவீர் திட்டம் போலவே இதிலும் இளைஞர்கள் வேலை இல்லாமலிருப்பார்கள். இவர்கள் சொல்லுவது ஸ்கில் இண்டியா அல்ல. கில் இண்டியா (இந்தியாவைக் கொல்) திட்டமாகும்.

## வரியும் வறிய மக்களும்

இந்தியாவின் மொத்த வரி வசூலில் 60% க்கு மேலாக வறியவர்கள், சாமானிய மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. ஆனால் எல்லா ஆதாயங் களும் சலுகைகளும் சூப்பர் (பெரும் பெரும்) பணக்காரர்களுக்கே கொடுக்கப்படுகிறது. சூப்பர் பணக்காரர்கள் மீது வரிவிதிக்க வேண்டும். சமூக நலத்திட்டங்களுக்கு கல்வி, மருத்துவத்துக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வரவேண்டுமென வலியுறுத்து கிறேன்.

## பீகாரும் சிறப்புத் திட்டமும்

பீகாரிலிருந்து ஜார்க்கண்ட் பிரிக்கப்பட்ட போது, பீகாரின் வருவாய் வெகுவாக வீழ்ச்சி யடைந்து விட்டது. அதை ஒட்டி பீகாருக்கு சிறப்புத்திட்டம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. ஆனால் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

பீகாரை ஒட்டியுள்ள சர்வதேச எல்லையின்

குறுக்கே தண்ணீர் பிரச்சனையால் ஏற்படும் சிக்கல் பெரும் சிக்கலான பிரச்சனையாகும். இதனால் அடிக்கடி வெள்ளப்பிரச்சனையை சந்திக்கிறது. இதை எதிர்கொள்ள நேபாளத்தில் ஒரு உயர்மட்ட அணை கட்டுவது பற்றி பேசப்பட்டது. ஆனால் பேச்சு பேச்சாகவே இருக்கிறது. எந்த முன்னேற்றமும் இல்லை. பீகார், வெள்ளத்தடுப்பு, துயர்தடுப்பு பணிகளில் மிகவும் பினதங்கியுள்ளது. இதனால் அதன் பாசனமுறையும் மிகவும் சீர்கெட்டுள்ளது. இது குறித்து இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும்.

செங்கல்பட்டிலுள்ள தடுப்பூசி உற்பத்தி மய்யத்தின் தற்போதைய உற்பத்தி நிலவரம் பற்றி...

**(தோழர் ராஜாராம்சிங் எழுப்பிய கேள்விகளுக்கு 26.07.2024 அன்று, மக்களவையில் அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் எழுத்துபூர்வமாக அளித்த பதில்கள்).**

ராஜாராம் சிங் (கேள்வி எண் 794)

கேள்வி: அ) சென்னை, செங்கல்பட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனமான ஒருங்கிணந்த தடுப்பூசி உற்பத்தி மய்யத்தின் தற்போதைய உற்பத்தி நிலவரம் என்ன?

பதில்: *செங்கல்பட்டில் ஒருங்கிணந்த தடுப்பூசி உற்பத்தி மய்யம் ஒன்றை ஹெச்எல்எல் பயோடெக் லிமிடெட் நிறுவனம் மூலம் அமைக்க இந்திய அரசு, மே 2012இல் அனுமதி அளித்தது. ஆனாலும் குறித்த காலக்கெடுவுக்குள் செயல்படுத்தமுடியவில்லை, இதனால் செலவு கணிசமாக அதிகரித்து விட்டது. தடுப்பூசி உற்பத்திக்கான இந்த ஹெச்பிஎல் நிறுவனத்தை செயல்பாட்டுக்கு கொண்டுவர பல்வேறு வாய்ப்புகள் பற்றி கண்டறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் திட்டவட்டமான விளைவுகள் ஏதும் இல்லை.*

கேள்வி: ஆ) செங்கல்பட்டின் இந்த ஒருங்கிணைந்த தடுப்பூசி உற்பத்தி மய்யத்தில் கோவிட் பெருந்தொற்றின்போது கோவிட்19 தடுப்பூசி உற்பத்தி செய்யப்பட்டதா? அப்படியானால் அதன் விவரம் என்ன? உற்பத்தி செய்யப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன?

இ) இந்தியாவின் நோய்த்தடுப்பு திட்டத்தை முன்னேற்றிடும் வகையில் செங்கல்பட்டு ஒருங்கிணைந்த தடுப்பூசி உற்பத்தி மய்யத்தை வலுப்படுத்த இந்திய அரசாங்கம் எடுத்த முயற்சிகள் என்ன?

பதில்: *ஆ) மற்றும் இ) செங்கல்பட்டிலுள்ள இந்த ஆலையை செயல்படுத்த, மருத்துவம், குடும்ப நலத்துறை அமைச்சகம் பல முயற்சிகளை மேற்கொண்டது. இந்த நிறுவனத்தை செயல்படுத்தும் ஆர்வமுள்ள திட்ட முகவர்களைக் கண்டறிய பிப்ரவரி 2021ல் ஒரு அறிவிப்பும் வெளியிடப்பட்டது. 2021, மார்ச் 26ல், இந்த ஆலையை பயன்படுத்திக் கொள்வதற்காக ஒரு ஈஒப்பந்தத்திற்கான ஏலமும் கோரப்பட்டது; தொடக்கத்தில், சில நிறுவனங்கள் ஆர்வம் காட்டினாலும் ஏலமெடுக்கும் நடைமுறையில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை.*

கேள்வி: ஈ) நாட்டின், பொதுத்துறைமூலம் தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க திட்டமேதும் உள்ளதா? அப்படியானால் அதன் விவரம் என்ன? அப்படி இல்லை என்றால் அதற்கு காரணமென்ன?

பதில்: *மருத்துவம், குடும்பநல அமைச்சகத்தின் கீழ் சுயமாக இயங்கும் குன்னூரிலுள்ள இந்திய பாஸ்டியூர் நிறுவனத்தின் மூலம் முத்தடுப்பூசி உற்பத்தி தற்போதுள்ள 85 மில்லியன் டோஸ் அளவை 130 மில்லியன் டோஸாக அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கோயம்புத்தூரில் உள்ள வைரல் தடுப்பூசி உற்பத்தி செய்யும் ஆலைக்கு 30 ஏக்கர் நிலம் ஒதுக்கவும் இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.*

# இகக(மாலெ) 11வது காங்கிரஸ் ஆவணங்கள்

## சுற்றுச்சூழல், காலநிலை நெருக்கடி (பகுதி 3)

(2023 பிப்ரவரி 16-20ல் பாட்னாவில் நடைபெற்ற 11வது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்)

11. நாம், சூரியஒளி, காற்று, இன்னபிற மாற்று ஆற்றல்களின் உற்பத்தியை, செயலூக்கமிக்க விதத்தில் முன்னேற்றிட வேண்டிய தேவை உள்ளது. மேலும் பெருமளவிலான பொதுப் போக்குவரத்து, சுத்தமான வாகன எரிபொருள், சுத்தமான சமையல் எரிபொருள், சுத்தமான மின்சாரம் வழங்க வேண்டுமெனவும் கோர வேண்டும். புதுப்பிக் கத்தக்க ஆற்றல் அதானி, அக்மி, பிர்லா போன்ற ஒரு சில கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அவர்கள் இலாபம் ஈட்டுவதற்காக ஒப்படைக்கப்படாமல், பரவலாக்கப்பட்ட விதத்தில் உற்பத்தி செய்யப் பட்டு, பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்தால் மட்டுமே அது பொருளுள்ள தீர்வாக இருக்க முடியும். நமது நாட்டில் புதைபடிவ எரிபொருளால் இயக்கப்படும் வாகனங்களுக்கு தீர்வாக மின்வாகனங்கள் அறிமுகப்படுத்தப்படுவ தாகக் காட்டப்படுகிறது. மின்சார வாகனங்களி லிருந்து நேரடியாக பசுமை வாயு வெளியேறுவது இல்லை என்ற போதும் அவை இயங்கும் மின்சாரம் பெருமளவுக்கு புதைபடிவ எரிபொருளில் இருந்தே உற்பத்தி செய்யப்படுகிறது.

12. காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுவது என்ற பெயரில் அணு மின்னாற்றலை உற்பத்தி செய்வதையும் அனுமதிக்க முடியாது என்பதையும் மனங்கொள்ள வேண்டும். அணு மின்னாற்றலுக்கு முன்னுரிமை தருவது தொழில் நுட்பரீதியில் போலியானது. மட்டுமின்றி, அணுக் கழிவுகளை அகற்றும் போது, தவிர்க்க முடியாதவாறு, பேரழிவுமிக்க தொடர் விளைவுகளோடு, தொடர்ச்சி யான அணுக்கதிர் வீச்சு காரணமாக தொழிற்சாலை, (கதிர்வீச்சு மூலகங்களை உற்பத்தி செய்யும்) சுரங்கத் தொழிலாளருக்கு கொடூரமான உடல்நல பாதிப்பு களையும் ஏற்படுத்தும். உண்மையில், உலகில் அணு ஆற்றல் உற்பத்தியை அதிகரிக்கும் பணி கையளிக்கப்பட்டிருக்கும் சர்வதேச அணு ஆற்றல் முகமை "காலநிலை மாற்ற சவால்களுக்கு அணு மின்னாற்றல் ஒரு குறுகிய கால தீர்வல்ல..." என்றும், "கரிம உமிழ்வை உடனடியாகவும், திடீரெனவும் குறைத்திடும் தேவைக்கு அணு உலைகளைக் கட்டுவதை விடவும் மிகவும் விரைவாக அமல்படுத்த முடியக்கூடிய அணுகுமுறை தேவைப்படுகிறது" என்றும் ஒப்புக்கொள்கிறது. கூடுதலாக, அணுமின் உலைகள் அடிப்படையில் இலாபத்தை தனியார் மயமாக்குகிறது; மனிதர்களுக்கான கொடூர பாதிப்பு களையும் ஆபத்துகளையும் சமூகமயமாக்குகிறது. எனவே நாம் கூடங்குளம், ஜைதாபூர் உள்ளிட்டு எங்கெல்லாம் புதிய உலைகள் கட்ட முயற்சிக்கப் படுகிறதோ அங்கெல்லாம் அணு மின்னாற் றலுக்கான முன்னுரிமையை எதிர்ப்பதை தொடர வேண்டும்.

13. 2011 டர்பனில், சர்வதேச பேச்சுவார்த்தை களின்போது, அமெரிக்காவும் மற்ற வளர்ந்த நாடுகளும் கொடுத்த நெருக்கடிக்கு பணிந்த இந்திய அரசாங்கம், பொதுவான ஆனால் வேறுபடுத்தப் பட்ட பொறுப்பு என்ற கொள்கையை (வரலாற்று ரீதியான உமிழ்வின் அடிப்படையில் உமிழ்வின் சுமைகளை பகிர்ந்தளிப்பது) மறுத்ததன் மூலம் பெரும் தவறிழைத்துவிட்டது என்பதை கவனத்தில் கொள்கிறோம். இந்தியா, ஏழை நாடுகள், வளரும் நாடுகளோடு ஒற்றுமை கொள்வதற்கு மாறாக, உமிழ்வைக் குறைப்பதற்கான அளவுகோலாக தனிநபர் உமிழ்வு அளவை அனுமதிக்கும் முன்வைப்பை ஏற்றுக் கொண்டது. அதன்மூலம் வளரும், ஏழைநாடுகள் மீது குறைவான உமிழ்விற்கு கூடுதல் தண்டம் என்ற முறையில் பெருஞ்சுமை திணிக்கப்பட்டுவிட்டது. சமத்துவம், வரலாற்று ரீதியான பொறுப்புடைமை என்ற இரு அடிப்படை களைக் கொண்டு இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென அழுத்தம் திருத்தமாக கூறவேண்டிய தேவை நமக்குள்ளது. பாரிஸ் ஒப்பந்தம், தன்னார்வ உமிழ்வுக் குறைப்பு திட்ட பொறியமைவு ஆகியவை மூலம் பொதுவான ஆனால் வேறுபடுத்தப்பட்ட பொறுப்பு என்ற கொள்கையை நீர்த்துப்போகச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கியோட்டோ நெறிமுறைகளின் கீழ் இருந்த முந்தைய அமைப்பு முறை போன்றில்லாமல் உமிழ்வைக் குறைப்ப தற்காக தாங்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு களை நாடுகள் தன்னிச்சையாக முடிவு செய்யும் இத்திட்டம், சட்டப்படியாக செயல் படுத்தப்

படக்கூடியதல்ல. கண்டிப்பாக குறைக்கப்பட வேண்டும் என்பதிலிருந்து தன்னார்வத்துடன் குறைத்துக்கொள்ளலாம் என்ற இந்த நகர்வு பசுமை இல்ல வாயு உமிழ்தலைத் தடுப்பதின் முயற்சியை நீர்த்துப்போகச் செய்யும். வளரும் நாடுகள் உமிழ்வுக் குறைப்புத் திட்டங்களில் பங்கெடுப்பதில்லை என தண்டிக்கும், பழிசுமத்தும் வளர்ந்த நாடுகளின் முயற்சியும் கூட, வளரும் நாடுகளால் எதிர்க்கப் படுகிறது. இருப்பினும், வளரும் நாடுகளின் நிலைமை சுரண்டலின் வர்க்கத்தன்மையை எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது.

14. நெல் பயிரிடுதல், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றிலிருந்து வரும் பசுமை இல்ல வாயு உமிழ்வை, உலகிலுள்ள மிகப்பெரும் தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளின் தொழிற்சாலைகள், வாகனங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் ஆடம்பர உமிழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கும் மிகவும் விசித்திரமான நிகழ்வை இந்தியா மற்ற வளரும் நாடுகளோடு இணைந்து கண்டித்தாக வேண்டும். வளரும் நாடுகளும் இந்தியாவும் நீண்டகாலமாக கொண்டுள்ள பிழைத்திருப்பதற்கான உமிழ்தல் குறைக்கப்படமுடியாது. மேலும் அவற்றை ஆடம்பர உமிழ்விலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய தேவையும் உள்ளது. இவையிரண்டையும் ஒரே வகையினத்திற்குள் கொண்டுவரும் எந்தவொரு முயற்சியும் ஆபத்தானதும், எதிர்க்கப்பட வேண்டியதுமாகும். தனிநபர் பசுமை வாயு உமிழ்வு, வரலாற்று ரீதியான பங்களிப்பு, பொதுவான ஆனால் வேறுபடுத்தப்பட்ட பொறுப்பு எனும் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என இந்தியா மற்ற வளரும் நாடுகளோடு சேர்ந்து அழுத்தம் திருத்தமாக கூறவேண்டியது முக்கியமானதாகும்.

15. இங்கு, காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் பொறுப்புகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இந்திய அரசாங்கம் சர்வதேச பேச்சு வார்த்தைகளைப் பயன்படுத்துவதில்லை என்பது முக்கியமானதாகும். காலநிலை நேய, சுற்றுச் சூழல் ரீதியில் நீடித்து நிலைத்த வளர்ச்சி மாதிரியை உருவாக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது. மக்களையும் வளங்களையும் இலாபத் திற்காக சுரண்டும் கார்ப்பரேட் செயல்பாட்டைப் போலல்லாது, வளர்ச்சி, வளங்கள், ஆற்றல் தேவைகள், மாற்றத்தின் உரிமையாளர்கள் ஏழை, எளிய மக்களே என்ற அணுகுமுறையை இந்தியாவின் (பருவநிலை மாற்ற) செயல்திட்டம் கொண்டிருக்க வேண்டும்.

16. இந்தியாவில் உள்ள பாஜக அரசாங்கம், 'தொழில் செய்வதை எளிதாக்குவது' எனும் பெயரில் தன்னுடைய நவ தாராளவாத திட்டங்களை நிறைவேற்ற, சுற்றுச்சூழல், வனச் சட்டங்களை திரிப்பதற்கும், ஒழிப்பதற்குமான எந்த வாய்ப்பை யும் விட்டு வைப்பதில்லை. வனங்களில் வாழும் அட்டவணை பழங்குடியினர், மற்ற மரபார்ந்த வனவாசிகள் பல தலைமுறைகளாக தங்களின் வாழ்வு, வாழ்வாதாரத்திற்கு சார்ந்திருக்கும் வன வளங்களின் தனிநபர், சமூக உரிமைகளை அங்கீகரிக்கும் வன உரிமைகள் சட்டம் 2006, பல்லாண்டுகள் போராட்டத்தின் விளைவாக சட்டமாக்கப்பட்டது. வனப் பகுதியில் எந்தவொரு திட்டத்திற்கும், எந்தவொரு 'இறுதி' அனுமதி வழங்குவதற்கு முன்பு பழங்குடியினரிடமும் வனவாசிகளிடமும் ஒப்புதல் பெறவேண்டிய தேவையை நடைமுறையில் இல்லாமலாக்குவதன் மூலம் புதிய வன (பாதுகாப்பு) விதிகள் 2022, வன உரிமைகள் சட்டத்தை (2006) அப்பட்டமாக மீறுகிறது. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையை மாற்றுவதன் மூலம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சட்டம் நீர்த்துப்போகச் செய்யப் படுவதற்கும், துணைக் கட்டுமான திட்டங் களுக்கு கிராமசபைகளிடமிருந்து தடையின்மை சான்றிதழ் பெறுவதை தவிர்க்க வன உரிமைகள் சட்டம் பல வகையிலும் மீறப்படுவதற்கும் நாம் சாட்சியாக இருக்கிறோம். வனப் (பாதுகாப்பு) விதிகள் 2022, வன அழிப்புக்கு ஈடுசெய்யும் பல்வேறு திட்டங்களைக் கொண்டுள்ளன. ஆனால், 'வளர்ச்சி' என்ற பேரால் வெட்டப்படுவதற்கும், வேரோடு பிடுங்கப்படுவதற்கும், தீயிட்டுக் கொளுத்தப்படு வதற்கும் ஆளாகப்போகும், பல நூற்றாண்டுகள் பழமையான வனங்களை மறு உருவாக்கம் செய்ய முடியாதவையாகவே உள்ளன. இந்த ஒட்டுமொத்த திட்டங்களும், இன்னும் இருக்கும் ஆற்றல்மிகு பாதுகாப்புகளை பழங்குடியினர், வனவாசிகளிட மிருந்து பிடுங்கி, இந்த வனங்களின் பெரும் கனிம, மற்ற இயற்கை வளங்களிலிருந்து இலாபம் சம்பாதிக்க வன நிலங்களை, அதானிகள், அம்பானி கள், ஜிந்தால்கள், வேதாந்தாக்களிடம் ஒப்படைப் பதை முறைப்படுத்தும். இயற்கையோடு நீடித்து நிலைத்த உறவுடன் வாழ்ந்துவரும் சமூகங்களை

– தொடர்ச்சி 22ம் பக்கம்...

# பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகள் இட ஒதுக்கீட்டுக்குள் உள் ஒதுக்கீடு வழங்குவது சம்பந்தமான உச்ச நீதிமன்ற தீர்ப்பு

ஆகஸ்ட் 1, 2024 அன்று உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளின் இட ஒதுக்கீட்டுக்குள் உள் ஒதுக்கீடு வழங்குவதன் சட்டபூர்வ தன்மையை அங்கீகரித்து 6:1 என்ற பெரும்பான்மை தீர்ப்பை வழங்கியுள்ளது. இருப்பினும் நீதிமன்றத்தால் இதற்கு 'வரம்பிலா அதிகாரம்' வழங்கப்படவில்லை. பின்தங்கிய நிலையின் மட்டம், அரசுக்கு பணிபுரிவதில் உள்ள பிரதிநிதித்துவம் ஆகியவற்றைக் கொண்டுள்ள, அளவிடப்படக்கூடிய, நிருபிக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் மட்டுமே இந்த உள் ஒதுக்கீடு அனுமதிக்கத்தக்கதாகும்; ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியாக இடங்கள் ஒதுக்க முடியாது; மேலும் அரசு அதனுடைய விருப்பத்திற்கு ஏற்பவோ அல்லது அரசியல் லாபங்களைக் கணக்கில் கொண்டோ மட்டும் வெறுமனே செயல்படவும் முடியாது; என்றெல்லாம் கூறி, உள் ஒதுக்கீட்டை செயல் படுத்துவதற்கான சட்ட வரையறைகளையும் நீதிமன்றம் கட்டாயமாக்கி உள்ளது. இந்த அதிகாரங் களுக்கு எல்லை வகுத்தும் கொடுத்திருக்கிறது. இறுதியில் முழுமையான, அறிவியல்பூர்வமான, வெளிப்படையான சாதிவாரி கணக்கெடுப்பின் தேவையை இது சுட்டிக் காட்டுகிறது. தலித், பழங்குடி சமூகத்தினரின் மத்தியிலுள்ள உள்ளார்ந்த பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்து மட்டுமல்ல, அனைத்து சாதி வகையினருக்கு இடையேயும் உள்ளேயும் இருக்கிற ஏற்றத்தாழ்வுகள் குறித்த தரவுகளையும் இந்தக் கணக்கெடுப்பு வழங்கும். அது இல்லாமல் இவ்விசயத்தில் முன்னோக்கி செல்வது கடினமாகும்.

சமூக நீதியையும் சமத்துவத்தையும் அடைவ தற்கான வழிகளையும் முறைகளையும் குறித்து நீண்டகாலமாக நடந்து வரும் விவாதங்களை இந்தத் தீர்ப்பு முன்னுக்கு கொண்டுவந்துள்ளது. இட ஒதுக்கீடு யாருக்கு மிகவும் அதிகமாகத் தேவைப் படுகிறதோ, அவர்களுக்கு, அது சென்றடைவதை உறுதி செய்வதற்கான வழிமுறையே உள் ஒதுக்கீடு; அது நீண்டகாலமாகவே செய்யப்படாமல் நிலுவையில் இருக்கிறது என சிலர் வாதிடுகிறார்கள். உள் ஒதுக்கீடு என்பது அரசியல் ரீதியில் பிரித்தாளும் தந்திரமாகும்; அது தலித்துகளும் பழங்குடிகளும் எதிர்கொள்கிற வரலாற்று ரீதியான அநீதியையும், தற்போதும் தொடர்கிற அவமானங்களையும் நீர்த்துப்போகச் செய்யக் கூடியதாகும்; அவர்க ளுடைய கூட்டு அடையாள உணர்வை வலுவிழக்க செய்யக் கூடியதாகும்; பெரும்பான்மை அரசியலில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கிற ஒன்றாகும்; என மற்றவர்கள் முன்வைக்கிறார்கள். இருந்தபோதிலும் இந்த இரண்டு நிலைப்பாட்டினரும் தங்களால் பகிர்ந்து கொள்ளப்படும் ஒரு நம்பிக்கையில் ஒன்றிணைகிறார்கள். இட ஒதுக்கீட்டை அமல் படுத்தும் முறையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு மாற்றமும், விளிம்பு நிலையிலுள்ள சமூகங்களுக்கு அதிகாரம் அளிக்கும் செயல்முறையை வலுவிழக்கச் செய்யாமல், வலுப்படுத்தும் நோக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதே அதுவாகும்.

உள் ஒதுக்கீடுகளை வடிவமைக்கும் அதிகாரங் களை மாநில அரசாங்கங்களுக்கு வழங்கிய அதேவேளையில் பட்டியல் சாதி இட ஒதுக்கீட்டுக் குள்ளேயே 'கிரீமி லேயர்' என்ற கருத்தாக்கத்தின் பொருத்தப்பாட்டை இணைப்பது குறித்த தனது கருத்தையும் இந்தத் தீர்ப்பு முன்வைத்துள்ளது. இதன்மூலம் இந்தத் தீர்ப்பு இந்த வழக்கின் எல்லைகளைத் தாண்டியும் சென்றுள்ளது. நீதிமன்றத் திற்கு முன்னால் இருக்கும் பிரச்சனை இதுவல்ல என்பதால், நீதிமன்றம் இதற்குள் மூக்கை நுழைப் பதற்கான தேவையோ அதிகாரமோ இல்லை. கூடுதலாக சமூக நீதியை நோக்கமாகக் கொண்ட அனுசரணை நடவடிக்கையின் சாரத்தை இது வலுவிழக்கச் செய்யும். அதே வேளையில் வரலாற்று ரீதியாக விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள பிற சமூகங்களுடன் ஒப்பிடும்போது, சமூகத்தில் பின்தங்கிய நிலையின் அதிக அருவருக்கத்தக்க வடிவங்களை தலித்துகள் எதிர்கொள்கிறார்கள் என்ற அடிப்படை உண்மையை இது புறக்கணிக்கிறது. மேலும் பொருளாதார அந்தஸ்தின் மூலம் சாதி மாற்றப்பட முடியாதது.

பிறப்பின் அடிப்படையிலான சமூக வகைப்படுத்தலின் நான்கு அடுக்குகளைக் கொண்ட வர்ண முறையால் கட்டமைக்கப்பட்டதுதான்

வேதகால இந்துத்துவம் ஆகும். இதில் சாதியப் படிநிலையின் அன்றாட வெளிப்பாடாக சாதிகள் இருக்கின்றன. இதற்கு மாறாக வாதிடும் எவரொரு வரும் ஒன்று வேதகால இந்துத்துவம் குறித்து தகவல் தெரியாதவராக இருக்கிறார்; அல்லது அரசியல் நலன்களுக்காக அதனை புனிதப்படுத்த முயற்சிக் கிறார். அப்படி இருக்கும் போது, இந்தத் தீர்ப்புடன் உடன்படும் ஒரு நீதிபதி சாதியின் தொடக்கம் என நம்பப்படுவதைப் பற்றி கவலையளிக்கிற பார்வையை எழுதியிருக்கிறார். பகவத் கீதையையும் கந்த புராணத்தையும் மேற்கோள் காட்டி பழங்கால இந்தியாவில் சாதிய முறை இல்லை என அவர் வாதிடுகிறார். அவர்களுடைய குணங்களையும் இயல்பையும் (பிறப்பினால் அல்ல) பொறுத்தே பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகியோரின் கடமைகள் நிர்ணயிக்கப் பட்டன என்கிறார். இந்த அதிர்ச்சி தரத்தக்க வரலாறற்ற கருத்துரைகள் ஆழமான பிரச்சனைக் குரிய பிராமணிய மனநிலையை பிரதிபலிக்கிறது. இந்தக் கருத்துரைகள் டாக்டர் அம்பேத்கராலும் அனேக ஆய்வாளர்களாலும் முழுமையாக அம்பலப் படுத்தப்பட்டு விட்டது. வேதகால இந்துத்துவத்தின் புனித நூல்களிலும் நடைமுறையிலும் மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள அனைத்து மதங்களிலும் அன்றாட நடைமுறைகளிலும் கூட, பின்னிப் பிணைந்துள்ள அநியாயங்களை புறக்கணிக்க முயற்சிக்கிற பெரும்பான்மை அரசியல் நிகழ்ச்சி நிரல் குறித்தும் இந்தக் கருத்துரைகள் பொய் யுரைக்கின்றன.

இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு புதிய மறு ஆய்வு தேவைப்படுகிறது எனவும் முதல் தலைமுறைக்கு மட்டும் அல்லது ஒரு தலைமுறைக்கு மட்டும் அது வழங்கப்பட வேண்டும் எனவும் கூட அதே நீதிபதி முன்வைக்கிறார். பட்டியல் சாதியினரும் பிற விளிம்பு நிலையில் இருக்கும் ஒடுக்கப்பட்ட பிரிவினரும் சமூகத்தின் அனைத்து தளங்களிலும் பங்கு பெறுவதை உறுதி செய்வதே இட ஒதுக்கீடு என்ற அனுசரணை நடவடிக்கையின் முக்கிய அம்சமாகும். இதற்கு மாறாக இட ஒதுக்கீடு குறித்த மோசமான புரிதல் கொண்டிருப்பதையே இந்தக் கருத்துரைகள் காட்டிக் கொடுக்கின்றன. மேலும் கூடுதலாக கிராமப்புற, நகர்ப்புற கட்டமைப்பு முழுவதற்கும், பல தலைமுறைகள் முழுவதற்கும், இந்தியாவின் தலித், பழங்குடிகள் எதிர்கொள்ளும் சமூக விலக்கம், விளிம்பு நிலைக்கு தள்ளப்படுதல் என்ற தொடரும் யதார்த்தத்தை எதிர்கொள்வதற்கு, மட்டுப்படுத்து வதற்கு ஒரு அனுசரணை நடவடிக்கையாகவே பட்டியல் சாதிகளின் இட ஒதுக்கீடு உள்ளது என்ற உண்மையையும் இது புறக்கணிக்கிறது. பல நூற்றாண்டுகளாக, பல தலைமுறைகளாக, வரலாற்று ரீதியாக விளிம்பு நிலைக்கு தள்ளப் பட்டுள்ளவர்களை ஒரு தலைமுறைக்குள் சரி செய்து விடலாம் என போகிற போக்கில் குறிப்பிடுவது, அரசமைப்புச் சட்டத்தை உயர்த்திப் பிடிக்கும் பணியில் உள்ள ஒருவர், மற்றவர்களின் உணர்வு களை புரிந்து கொள்ளாமல் கருத்துரைப்பது தேவையற்ற ஒன்றாகும். புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களிலும் ஐஐடி, ஐஐஎம் போன்ற உயர்கல்வி மையங்களிலும், மருத்துவ, பொறியியல் கல்லூரி களிலும் பட்டியல் சாதி மாணவர்களும் ஆய்வாளர்கள்/அறிஞர்களும் தொடர்ந்து பெரும் துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்ற இந்திய யதார்த்தத்தை இந்தக் கருத்துரைகள் முற்றிலும் அலட்சியம் செய்கின்றன.

பாசிச மோடி ஆட்சியின் கீழ், முரட்டுத்தனமான தனியார்மயமாக்கலும், சுருங்கிக் கொண்டிருக்கிற மக்கள் நல அரசும், அரசு கல்வியை, வேலையை வழங்குகிற வாய்ப்புகளை கடுமையாக குறைத்து விட்டன. வேலைக்கு ஆளெடுப்பதை காலவரை யின்றி நிறுத்தி வைத்திருக்கும் அரசாங்கத்தின் உணர்வுபூர்வமான கொள்கைகள், வேலையிலும் கல்வியிலும் எஸ்சி, எஸ்டி இட ஒதுக்கீட்டிற்கு தற்போது இருக்கும் விதிகளை போதுமான அளவு அமல்படுத்தாத நிலை, தனியார் துறையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தும் வாய்ப்புகளை கண்டறி யாமல் இருப்பது, சமத்துவத்தை, சமூக நீதியை ஊக்குவிக்கும் கொள்கைகளை பொதுவாக பலவீனமாக்குதல் ஆகிய அனைத்தும் இதோடு இணைக்கப்படுகிறது. இதன் விளைவாக இந்த ஆட்சியின் நோக்கம் போல சில காலத்திலேயே இந்த வாய்ப்புகள் அனைத்தும் முழுவதுமாக வறண்டு போய்விடும்.

பொருத்தமானவர்கள் கண்டறியப்படவில்லை என்ற தந்திரத்துடன் இட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்ட பணியிடங்களை நிரப்பாமல் வைத்திருப்பதை முறையான சட்ட, அரசியல் தலையீட்டுடன் ஒழித்துக் கட்ட வேண்டியது தற்போதைய காலத்தின் கட்டாய மாகும். விடுதலை பெற்று 77 ஆண்டுகளுக்கு பிறகும் கூட, ஒடுக்கப்பட்ட சமூகங்கள் தீவிர விளிம்பு நிலையில் இருப்பதை பீகார் சாதிவாரி

கணக்கெடுப்பு வெளிக்கொண்டு வந்துள்ளது. இட ஒதுக்கீட்டிற்கு 50% வரம்பை நிர்ணயித்திருப்பது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை உள்ளது. இட ஒதுக்கீட்டின் வரம்புகளை விரிவாக்கு வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதுபோல தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட வேண்டும்.

சமூகநீதிக்கான, சமூக சமத்துவத்திற் கான ஒரு கருவியாக அரசமைப்புச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீடு அதிகரித்த அளவு தாக்கு தலை எதிர்கொள்கிறது; அரசமைப்பு சட்டமும் கூட அப்படியான தாக்குதலை எதிர்கொள்கிறது. இவ்வேளையில் சமூகத் தின் விளிம்பு நிலையிலுள்ள, ஒடுக்கப் படுகிற, வறுமை நிலையிலுள்ள அனைத்து மக்களிடையேயும் அதிகரித்த அளவில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் நமக்கு தேவையாக உள்ளது.

ஒடுக்கப்படுகிற, வறுமை நிலையி லுள்ள மக்களிடையே அதிகரித்த பிரிவினையையும் பகைமையுணர்வை யும் ஊக்குவிக்க உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு இடம் கொடுத்துவிடக் கூடாது; தங்களது சமூக, பொருளாதார மேலாதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத் திக்கொள்ள, அதிகாரமிக்கவர்கள், சலுகை பெற்றவர்களின் பிரித்தாளும் தந்திரத்திற்கு சேவை புரிவதாகவும் இந்தத் தீர்ப்பு அமைந்து விடக்கூடாது. அதற்கு மாறாக சமூக விலக்கம், விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுதல் ஆகிய வற்றுக்கு எதிரான கூட்டு போராட்டத்தை வலுப்படுத்துவதாகவும் சமூக நீதியின், சமத்துவத்தின் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கவும் இந்த தீர்ப்பு பயன் பட வேண்டும். இதனை செய்ய வேண்டியது சமத்துவ சமூகத்திற்காக பாடுபடும் அனைத்து சக்திகளின் கடமையாகும். ❑

எம்எல் அப்டேட் 06-12 ஆகஸ்ட் 2024

**தமிழாக்கம் - செந்தில்**

# இகக(மாலெ) அரசியல் தலைமைக் குழு கூட்டத்தின் தீர்மானங்கள்

(ஆகஸ்ட் 1, 2024 அன்று டெல்லியில் நடைபெற்ற சிபிஐஎம்எல் அரசியல் தலைமைக் குழு கூட்டத்தின் தீர்மானங்கள்)

## இகக(மாலெ)விடுதலையுடன் மார்க்சிஸ்ட் ஒருங்கிணைப்பு குழு (எம்சிசி) இணைப்பு

1972 இல் தோழர் ஏகே ராய், பிற தலைவர்களால் நிறுவப்பட்ட ஜார்க்கண்ட்டின் மார்க்சிய ஒருங்கிணைப்பு குழு (எம்சிசி) சிபிஐஎம்எல் உடன் இணைவது என்று அதன் மத்திய கமிட்டி ஏற்றுக்கொண்ட முடிவை சிபிஐஎம்எல் மத்திய கமிட்டியின் அரசியல் தலைமை குழு உளமார வரவேற்கிறது. தோழர் ஏகே ராயின் உத்வேகமூட்டக்கூடிய புகழ்மிகு தலைமையின் கீழ் ஜார்க்கண்ட் இயக்கத்தில் எம்சிசி ஒரு முக்கிய பங்காற்றியது. மேலும் இந்தியாவின் நிலக்கரி தொழில் துறையை தேசியமயமாக்க வேண்டும் என்பதற்காகவும் போராடியது. அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிராக அதன் புகழ்மிகு போராட்ட மரபுடன் ஜார்க்கண்ட் கம்யூனிச இயக்கம் சிபிஐஎம்எல் உடன் ஒருங்கிணைந்த இந்த நிகழ்வு ஒரு குறிப்பிடத்தக்க போக்காகும். இன்றைய இக்கட்டான தருணத்தில் மோடி அரசாங்கம், சங்கிப் படையணியின் பாசிசத் தாக்குதலுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தைத் தீவிரப்படுத்த ஜார்க்கண்ட்டின் போராடும் சக்திகளுக்கு இது ஆற்றலூட்டும். மேலும் ஜார்க்கண்டின் உழைக்கும் வர்க்கம், தலித்துகள், பிற மரபான சமூகங்கள், வறிய மக்களின் உரிமைகளையும் ஒற்றுமையையும் பாதுகாப் பதற்கான போராட்டத்திலும் போராடும் சக்திகளுக்கு இது ஆற்றலூட்டும். மார்க்சிய ஒருங்கிணைப்புக் குழுவின் ஒட்டுமொத்த உறுப்பினர்களையும் மதிப்புமிக்க விதத்தில் இணைத்துக் கொண்டு, இந்த ஒருங்கிணைப்பு செயல்முறையை செய்துமுடிக்கத் தேவையான நடவடிக்கைகளை தொடங்க வேண்டுமென கட்சியின் ஜார்க்கண்ட் மாநில கமிட்டிக்கு அரசியல் தலைமை குழு அழைப்பு விடுகிறது.

## 2024 மக்களவைத் தேர்தல்களில் பதிவான, எண்ணப்பட்ட வாக்குகளுக்கு இடையே உள்ள பொருத்தமின்மை

ஜனநாயகத்திற்கான வாக்கு என்ற அமைப்பின் மூலம் ஜூலை 22 அன்று 'மக்களவைத் தேர்தல்கள் 2024 நடத்தப்பட்ட முறை' என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. அது 2024 மக்களவைத் தேர்தல்களின் போது பதிவான, எண்ணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு இடையே உள்ள பெருத்த பொருத்தமின்மையை அம்பலப்படுத்தியது. அனைத்து தொகுதிகளிலும் சேர்த்து மொத்தமாக 4,65,46,885 வாக்குகள் அதிகரித்துள்ளன என அந்த அறிக்கை கண்டுபிடித்தது. இந்த வேறுபாட்டால் 15 மாநிலங்களின் 79 தொகுதிகளில் பாஜக/

என்டிஏ பயனடைந்து இருக்கலாம். இந்த தொகுதிகளின் வெற்றியாளர்கள் பெற்ற வாக்குகளின் வெற்றி வித்தியாசம், ஒவ்வொரு தொகுதிக்கும் சராசரியாக அதிகரித்த வாக்குகளை விட குறைவான தாகும். இதற்கு இந்திய தேர்தல் ஆணையம் பதில் சொல்லியாக வேண்டும். தேர்தல் ஆணையம் மௌனமாக இருப்பது, தேர்தல் முறைகேடு குறித்த சந்தேகங்களுக்கு வலுச்சேர்ப்பதாகவே உள்ளது.

## மேற்கு வங்கத்தைப் பிரிப்பதற்கு தூண்டி விடும் விதமாக பாஜக தலைவர்கள் வெளியிடும் அறிக்கைகள்

மேற்கு வங்கத்தைப் பிரிக்க வேண்டுமென அழைப்பு விடுத்து சதிமிகுந்த அறிக்கைகளை அண்மையில் பல பாஜக தலைவர்களும் வெளியிட்டனர். அப்படியான ஒரு அறிக்கையை வெளியிட்ட பாஜக நாடாளுமன்ற உறுப்பினரும் மேற்குவங்க மாநில தலைவருமான சுகந்த மஜும்தார், வடக்கு வங்கத்தை வடகிழக்கு இந்தியாவுடன் ஒன்றிணைக்க வேண்டும் என அதில் முன்வைத்தார். மற்றொரு பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் அனநாத் மகராஜ், அசாமின் சமவெளி மாவட்டங்களுடன் கூச்பிஹார் பகுதியை இணைத்து தனியே விரிந்த கூச்பிஹார் மாநிலமாக அமைக்க வேண்டுமென முன்வைத்தார். குர்ஸியோங்கின் பாஜக சட்டமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத் சர்மா ஒட்டுமொத்த வடக்கு வங்க பகுதிகளையும் உள்ளடக்கிய யூனியன் பிரதேசமாக கூர்க்காலேண்டை அறிவிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார். ஜார்க்கண்ட் பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் நிஷிகாந்த் தூபே மேற்கு வங்கத்தின் மால்டா, முர்ஷிதாபாத், வடக்கு வங்க மாவட்டங்கள் ஆகியவற்றை பீகாரின் கிஷன்கன்ஞ், கத்திகார், பூர்ணியா, அராரியா உள்ளிட்ட சீமாஞ்சல் பகுதியுடன் இணைத்து தனி மாநிலமாக அல்லது யூனியன் பிரதேசமாக மாற்றவேண்டும் என வாதிடுகிறார். மோடி அரசாங்கத்தின் இந்த பிரித்தாளும் தந்திரத்தை நாம் நிச்சயமாக முறியடிக்க வேண்டும். இந்தியாவின் கூட்டாட்சிக் கட்டமைப்பை சிதைத்து, மாநிலங்களை அதீத மையப்படுத்தப்பட்ட மத்திய அரசின் புற அங்கங்களாக மாற்றுகிற அதனுடைய முயற்சிகளையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

## டெல்லியின் பயிற்சி மையத்தில் வெள்ளத்தால் நிகழ்ந்த துயரம்

ஜூலை 27 அன்று ராவு'ஸ் ஐஏஎஸ் பயிற்சி மையத்தின் நிலவறை நூலகத்தில் நுழைந்த வெள்ளத்தால் யுபிஎஸ்சி தேர்வுக்காக படித்துக் கொண்டிருந்த மூன்று பேர் மரணம் அடைந்தனர். எவ்வித பொறுப்புணர்வும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இன்றி செயல்பட்டுக் கொண்டிருக்கும் பயிற்சி மைய தொழில்துறையின் அக்கறையற்ற நிலையை இந்த துயர நிகழ்வு அம்பலப்படுத்தியுள்ளது. இந்நிகழ்வின் அதிர்ச்சிதரத்தக்க தகவல்களையும் இந்தத் துயரத்தின் உண்மை நிலையையும் காவல்துறை மூடி மறைக்கிறது என மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மோடி அரசாங்கம் டெல்லி அரசாங்கத்தின் உரிமைகள் மீது திட்டமிட்ட ரீதியில் நடத்துகிற தாக்குதலும், முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கெடுநோக்குடன் கைது செய்ததும் டெல்லியை குழப்பத்திற்குள்ளும் அராஜகத்திற்குள்ளும் தள்ளியுள்ளது. மோடி அரசாங்கத்தின் இந்த அசிங்கமான அரசியல் விளையாட்டுகளுக்கு டெல்லியின் குடிமக்கள் பெரும் விலை கொடுக்க வேண்டியுள்ளது. இந்த ராஜேந்திர நகர் துயரத்திற்கு டெல்லியின் துணைநிலை ஆளுநர், ஒன்றிய உள்துறை அமைச்சர் ஆகியோரின் கூட்டணி முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும். இந்த நிகழ்வு குறித்து விரிவான அறிக்கை வெளியிடப்பட வேண்டும். ராவு'ஸ் ஐஏஎஸ் பயிற்சி மையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட வேண்டும். இந்த குற்றவியல் அலட்சிய செயலுக்கு உடந்தையாக இருந்த பிறரும் கைது செய்யப்பட வேண்டும். டெல்லியில் மாணவர்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தணிக்கை செய்யப்பட வேண்டும். பொருத்தமான அனைத்து பாதுகாப்பு விதிகளும் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சான்றிதழ் வழங்குவதும் செய்யப்பட வேண்டும்.

## வயநாடு நிலச்சரிவு துயரம்

வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவுகளாலும் அதனால் ஏற்பட்ட இறப்புகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் மனத்துயரையும் வலியையும் நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். இந்த நிலச்சரிவில் 185க்கும் அதிகமான பேர் தங்கள் உயிரை இழந்துவிட்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர். அவர்கள் இவ்வளவு நாளும் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தையும் பொருள்களையும் இழந்துவிட்டனர். இதயத்தைச் சுக்குநூறாக

உடைக்கும் இந்தப் பெரும் அழிவு ஆழ்ந்த வருத்தத்தை உள்ளாக்கியிருக்கிறது. இந்தப் பேரிடரில் வயநாடு, கேரளா மக்களோடு சிபிஐஎம்எல் ஒருமைப்பாட்டுணர்வுடன் இணைந்து நிற்கிறது. வயநாடு நிலச்சரிவு துயரம் ஒரு தேசிய பேரிடராக அறிவிக்கப்பட வேண்டும் எனக் கோருகிறோம். மோடி தலைமையிலான ஒன்றிய அரசாங்கத்தின் மூலம் உடனடியாக ஒன்றிய அரசின் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். இத்தகைய துயரங்களின், நிலச்சரிவுகளின் பின்னால் இருக்கும் காரணங்கள் குறித்து மாநில, மத்திய நிறுவனங்கள் ஆய்வும் விசாரணையும் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் தங்கள் உயிர்களையும், அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த சொத்துகளையும் இழப்பதைத் தடுக்க முறையான நடவடிக்கைகளைச் செயல் படுத்த வேண்டும்.

### பாலஸ்தீன சூழல்

காசாவிலும் மேற்கு கரையிலும் பாலஸ்தீனியர் களுக்கு எதிராக அமெரிக்க ஆதரவு பெற்ற இஸ்ரேலின் இனவெறி போர், இதுவரையிலும், 16,314 குழந்தைகள் உள்ளிட்ட 40,000 மக்களைக் கொன்று குவித்துள்ளது. காசாவின் மீது குண்டுகளால் நடத்தப்படும் பரவலான பேரழிவைத் தாண்டியும், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு படையினர் மனிதாபிமான வாகனத் தொடர்கள் மீது வேண்டுமென்றே தாக்கு வது உட்பட, பொதுமக்களை பட்டினி போட்டு சாகடிப்பதையும் போரின் ஆயுதமாகப் பயன்படுத்து கின்றனர். இது பெருங்கேடு விளைவிக்கத்தக்க மனிதாபிமான, மருத்துவ நெருக்கடிக்கு வழிவகுத் துள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகுவின் பதவி விலகலை கோரி நாடு முழுவதும் பரவலாக நடைபெறும் மாபெரும் போராட்டங் களுக்கு மத்தியில், அவர் தனது அதிகாரத்தை தக்கவைக்கும் முயற்சியாக, இந்தப் போரை அந்தப் பகுதி முழுவதற்குமான போராக மாற்றி விடும் சதியில் ஈடுபடுகிறார். நெதன்யாகு ஆட்சியால் ஈரானில் ஹமாசின் அரசியல் தலைமை குழு தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் அண்மைய படுகொலை, லெபனானில் தேர்ந்தெடுத்து நடத்தப்படுகிற கொலைகள், போர் நிறுத்தம்பணயக்கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தத்திற்கு தடைகளை ஏற்படுத் துவது ஆகியவற்றின் மூலம் இந்தப் பகுதி முழுவதையும் போரின் விளிம்பு நோக்கி தள்ளி விடுகிறார். பாலஸ்தீன மக்களுக்கு, விடுதலைக்கான அவர்களின் போராட்டத்திற்கு கட்சியின் அரசியல் தலைமைக் குழு கூட்டம் உறுதியான ஆதரவை வெளிப்படுத்துகிறது. மேலும் காசா மீதான இஸ்ரேலின் போர் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும் கோருகிறது.

### பிரான்ஸ் தேர்தல்கள்

அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் பாசிஸ்டுகளை தடுத்து நிறுத்தியதற்காக பிரான்ஸ் மக்களுக்கு அரசியல் தலைமை குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக 1789இல் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்திற்கு உரத்து அறை கூவல் விடுத்த நிலமான பிரான்ஸ், 1871 இன் வரலாற்று சிறப்புமிக்க பாரிஸ் கம்யூன் வழியாக சோசலிசத்திற்கான முதல் காட்சியை அரங் கேற்றியது. அது தற்போது இடதுகள், முன்னணி பங்கேற்பாளர்களாக செயல்படும் பாசிசத்திற்கு எதிரான எதிர்ப்பின் முக்கிய அரங்கமாக மீண்டும் ஒருமுறை எழுந்து வருகிறது.

## வெனிசுலாவின் தேர்தல்கள்

ஜூலை 28 அதிபர் தேர்தல்களுக்கு பிறகு வெனிசுலா நாட்டில் அமெரிக்க ஆதரவு பெற்ற தீவிர வலதுகளின் வன்முறை தொடருகிறது. அதனை எதிர்கொள்ளும் வெனிசுலாவின் மக்களுக்கும், சோசலிச பொலிவாரியன் புரட்சியைப் பாதுகாக்கும் அவர்களுடைய போராட்டத்திற்கும் அரசியல் தலைமை குழு கூட்டம் முழுமையான ஒருமைப் பாட்டை வெளிப்படுத்துகிறது. கார்ப்பரேட் ஆதரவு, ஏகாதிபத்திய ஆதரவு, சர்வதேச ஊடகங்கள் தீவிர வலதுசாரி எதிர் கட்சிகள் ஆகியோர் தேர்தல்களுக்கு முன்னதாகவே மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அவர்கள் பொலிவாரியன் செயல் முறையையும் அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் தோல்வியையும் கூட பிரகடனப்படுத்தினர். அதன் மூலம் தேர்தலுக்கு பின்பு வன்முறையும் குழப்பமும் நிகழ்வதற்கான வளமான நிலமாக வெனிசுலாவை உருவாக்க முயற்சித்தனர். அண்மையில் நடைபெற்ற அதிபர் தேர்தல்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அப்பட்டமான ஆணவம், பொருளாதார தடைகள், நாட்டை சீர்குலைக்க நினைக்கும் நவமன்றோ கோட்பாடு ஆகியவற்றுக்கு எதிரான, அவர்களது பொலிவாரியன் புரட்சிகர செயல்முறைக்கு ஆதரவான வெனிசுலா மக்களின் ஜனநாயகபூர்வமான தீர்ப்பை எதிரொலிக்கின்றன. ❑

# பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிரான ஜவுளித் தொழில் கூட்டணியின் திட்ட வடிவமைப்பு பட்டறை.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வழி காட்டுதலில், ஐ.நா. பெண்கள் அமைப்பின் தமிழ் நாடு ஜவுளித் தொழில் கூட்டணி நடத்திய மே மாத இணைய வழி கூட்டத்தின் அடுத்த கட்ட நகர்வாக 2024 ஆகஸ்டு 8 ஆம் தேதி அன்று கோயம்புத்தூரில் ஜவுளித் தொழில் கூட்டணியின் திட்ட வடிவமைப்பு பட்டறை நடத்தப்பட்டது. அனைத்து தொழிற் சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஏஐசிசிடியு சார்பாக தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் கிருஷ்ணவேணியும், மாநிலக் கவுன்சில் உறுப்பினர் தோழர் சரவணனும் கலந்து கொண்டனர். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல் தொழிற்சாலைகள், குடிமைச் சமூகங்கள் மத்தியில் பல்வேறு பணிகளில் ஈடுபடும் அரசு சாரா நிறுவனங்களில் இருந்தும் பிரதிநிதிகள் இந்தப் பட்டறையில் கலந்துகொண்டனர்.

இந்தப் பட்டறையில் கலந்துகொண்டு பேசிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதி திருமதி பிர்லா அவர்கள், மனித உரிமை, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, கட்டாய வேலை ஒழிப்பு போன்ற பிரச்சினைகளை மையப்படுத்தி வேலை செய்யும் தங்கள் அமைப்பு, பெண்கள் மீதான பாலியல் வன்முறை, பாலியல் சிக்கல்கள் ஆகிய வற்றை ஒழிப்பதற்கான அவசியம் கருதி இந்தப் பட்டறையில் கலந்துகொள்வதாகக் கூறினார். இந்தக் கொடுமைகளுக்கு எதிரான பூஜ்ய சகிப்புத் தன்மை என்ற முழக்கத்தை முன் வைப்பதாகக் கூறினார்.

திட்ட வடிவமைப்பு பட்டறையில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் நான்கு குழுக்களாகப் பிரிந்து விவாதித்தனர். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ( சிஐடியு, ஐஎன்டியுசி,பிஎம்எஸ்) தங்கள் பகுதியில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாக மொழி யும், ஆண்களின் குடிப்பழக்கமும் உள்ளதாகத் தெரிவித்தனர். இன்று ஜவுளித் தொழிலில் பணிபுரியும் பெரும்பாலான பெண்கள் வட இந்திய மாநிலங்களில் இருந்து அழைத்துவரப்படுவதால் அவர்களோடு பேசுவதற்கு மொழி பெருந்தடையாக இருப்பதாகவும், ஆண் தொழிலாளர்களின் குடிப் பழக்கம் பெண்கள் மீதான வன்முறைகளுக்கு காரணமாக இருப்பதாகவும் தெரிவித்தனர். ஏஐசிசிடியு தரப்பில் கலந்துகொண்ட தோழர்கள் சூழலை விளக்கிப் பேசினர். முதலாவதாக வட மாநிலங்களில் இருந்து அழைத்து வரப்படும் பெண் தொழிலாளர்கள் முதலாளிகளுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள கூடாரங்களில் 24மணி நேரம் கண்காணிப்பில் தங்க வைக்கப்படுகின்றனர். தங்கள் கிராமங்களில் பசி, வறுமையாலும் மேல்சாதியினரின் பாலியல் வன்கொடுமைகளாலும் பாதிக்கப்பட்டு, தங்கள் வாழ்வாதாரத்தைத் தேடியே இங்கு வருகின்றனர். இங்கு மேலதிகாரிகள், கண்காணிப்பாளர்கள் ஆகியோரை பகைத்துக் கொள்ள விரும்புவதில்லை. நிர்வாகத்தின் பயமுறுத்தல், மொழிப்பிரச்னை ஆகியவற்றால் என்ன நடந்தாலும் கண்டுகொள்ளாமல் வாழப் பழகுகின்றனர். நிர்வாகமோ அவர்களை எந்த வகையிலும் தொழிற்சங்கங்கள் நெருங்காமல் பார்த்துக் கொள்கின்றன. இப்படி ஜவுளித் தொழிலில் பணிபுரியும் பெரும்பான்மை தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களிலிருந்து அந்நியப்படுத்தப் பட்டுள்ளனர். மற்ற தொழிற்சங்க தோழர்களின் ஆலோசனைகளையும் ஒருங்கிணைத்து கீழ்க்கண்ட கோரிக்கைகள் செயல் திட்டமாக தோழர் கிருஷ்ணவேணியால் முன் வைக்கப்பட்டது.

1.ஜவுளித் தொழிலில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களும் அங்குள்ள ஏதாவது ஒரு தொழிற்சங்கத்தில் உறுப்பினர் ஆக வேண்டும்.

2. தொழிலாளர்களின் பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்கான கமிட்டிகளின் பிரதிநிதிகள் தொழிலாளர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

3. பெண் தொழிலாளர்கள் தங்கி இருக்கும் முகாம்களுக்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் செல்லவும், அவர்களோடு பேசவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

4. பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்முறை மற்றும் சீண்டல்கள் முற்றாக ஒழிக்கப்படவும் ஆண்களின் குடிப்பழக்கத்திற்கு எதிராகவும் ஆண்கள் மத்தியில் விழிப்புணர்வு

- தொடர்ச்சி 23ம் பக்கம்

# செப்டம்பர் 2, செப்டம்பர் 13 கிராமப்புர தொழிலாளர், வறியவர்களின் அரசியல் அறுதியிடல் நாட்களாக்க உறுதியேற்க அவிகிதொச அழைப்பு!!

செப்டம்பர் 2, தோழர்கள் சந்திரகுமார், சந்திரசேகர் தியாகிகளான நாள். செப்டம்பர் 13, தோழர் சுப்பு தியாகியான நாள். கிராமப்புர தொழிலாளர், வறிய விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்களை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர விவசாய இயக்கத்தை உருவாக்க தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் இவர்களை நக்சல்பாரி அரசியல் வழியில் ஆற்றல் மிக்க இயங்கு சக்தியாக அணிதிரட்ட களப்பணி யாற்றி களப்பலியானவர்கள்.

இந்த அரசியல் உறுதிப்பாட்டை செயல் படுத்திக் காட்ட கிராமப்புர தொழிலாளர், வறியவர் கள், ஒடுக்கப்பட்ட தலித், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரை வெகுமக்கள் சக்தியாக எழச்செய்யும் திட்டம் அடிப்படையானது, முதன்மையானது. இதை செயல்படுத்தும் விதமாக அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் அழைப்பு விடுத்தது.

அவிகிதொச தேசிய பொதுக்குழு முடிவுகளை செயல்படுத்தும் விதமாக ஆகஸ்ட் 14,15 தேதிகளில் கந்தர்வக்கோட்டை யில் கூடிய மாநில செயற்குழு, பிரிட்டிஷ் எதிர்ப்பு நாட்டு விடுதலைப்போரில் உயர்நீத்த ஆகஸ்ட் புரட்சியாளர்கள், தேசபக்தர்கள், கம்யூனிஸ்ட்களை சுதந்திரத்தின் 78 வது ஆண்டில் நினைவுகூர்ந்தது.

மாநிலத்தின் ஏறத்தாழ 20 மாவட்டங்களிலுள்ள 30 க்கு மேற்பட்ட ஒன்றியங்களில் 250 க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் ஆகஸ்ட் 20 முதல் ஊராட்சி பரப்புரை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. ஊராட்சி தொடங்கி ஒன்றிய அளவில் பரப்புரை இயக்கத்துக்கான தயாரிப்புகளை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது. அடையாளப்படுத்தி முடிவு செய்யப்பட்ட ஊராட்சி முன்னணி பழைய, புதிய பெண்கள்; இளைஞர்களைக் கொண்டு தயாரிப்புக் கூட்டங்கள் நடத்தி தயாரிப்புகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. செப்டம்பர் 1 முதல் பரப்புரை நடத்துவதென்றும் செப்டம்பர் 2 அன்று, வீடு வீடாக மக்களைச் சந்திப்பது, ஊர்க் கூட்டங்கள் என வாய்ப்புள்ளநடை பயணம் வடிவங்களில் ஊராட்சி முழுவதும் ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்கள் ஒன்று விடாமல் பரப்புரை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து ஊராட்சி அளவில் நூற்றுக்கணக்கான தொழிலா ளரைக் கொண்ட அணிதிரட்டல்களை நடத்துவதென முடிவானது.

ஊராட்சி மாநாடுகள் நடத்தி செயல்படும் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்தி அதன் வழியாக ஒன்றிய அமைப்புகளை மாநாடுகள் மூலம் உறுதி செய்வதென்றும் முடிவானது. அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஆயிரங்களில் பங்கு பெறும் ஒன்றிய அணிதிரட்டல் நடத்துவதென்றும் நாடாளுமன்றம் நோக்கிய பேரணிக்கு தயாராவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு அவிகிதொசவை பல லட்சக் கணக்கான உறுப்பினர் பலம் கொண்ட புரட்சிகர வெகுமக்கள் இயக்கமாக்கும் கடமையை சாதிக்கும் திசையில் முன்னேற கூட்டம் உறுதி கூறியது. தமிழ்நாட்டின் அரசியலில் கிராமப்புர தொழிலாளர் வறியவர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் தலைமைதாங்க வேண்டும் என்ற புரட்சிகர லட்சியத்தை முன்னேற்றும் போராட்டக் களத்தில் தான் இகக(மாலெ) முதல் மாநிலச் செயலாளர் தோழர் அப்பு இதே செப்டம்பர் மாதத்தில் ஆட்சி யாளர்களால் அடையாளம் தெரியாத வகையில் கொல்லப்பட்டார். அந்தக் கொள்கைச் சுடரை கையேந்திச் சென்ற பயணத்தில்தான் தோழர்கள் மச்சக்காளை, சந்திரகுமார், சந்திரசேகர், சுப்பு தியாகிகளானார்கள்.

கோபாலகிருஷ்ண நாயுடு போன்ற கொடூரமான பல நூறு பண்ணையார்களைவிடவும் கொடிய பாசிச ஆட்சியை எதிர்க்க, நாட்டின் வளங்களையெல்லாம் அதானிகள், அம்பானிகள் வாரி சுருட்டிக் கொள்ள ஆட்சி நடத்தும் பாசிச மோடி ஆட்சிக்கு எதிரான உறுதியான அரசியல் சக்தியாக அணிதிரட்டிட வேண்டும். செப்டம்பரில் முப்பெரும் விழா காணும் திராவிட அரசியல் களத்தில் மாற்று அரசியல் சக்தியாக ஜனநாயக இயக்கமாக அணிதிரள வழிகாண வேண்டும். கூட்டத்தில் மாநிலத் தலைவர் பாலசுந்தரம், பொதுச் செயலாளர் என்.குணசேகரன், இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி கலந்து கொண்டனர். ❑

**– என்.குணசேகரன்**

## விவசாயிகள் போராட்டத்தை தீவிரப்படுத்துங்கள்:
## அகில இந்திய விவசாயிகள் மகாசபை அறைகூவல்

அகில இந்திய விவசாயிகள் மகாசபை(ஏஐகேஎம்)யின் தேசிய கவுன்சில் கூட்டம் கடந்த ஆகஸ்டு 3, 4 ஆகிய தேதிகளில் பஞ்சாப் மாநிலம் மான்சாவில் நடைபெற்றது. நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இருந்து 120க்கும் மேற்பட்ட தேசிய கவுன்சில் உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

தேசிய தலைவர் ரூட்லு சிங் தலைமை தாங்கினார். விவசாயிகள் இயக்கத்தின் திசைவழி மற்றும் கடமைகள் பற்றி துணைத் தலைவர்கள் உரையாற்றினர்; பீகார் மாநில ஏஐகேஎம் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுதாமா பிரசாத் அவர்கள் நாடாளுமன்றத்தில் எழுப்பிய விவசாயிகள் பிரச்சினைகள் பற்றி பேசினார். பொதுந் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜாராம் சிங், அரசியல் சூழல் மற்றும் நாடுதழுவிய விவசாயிகள் இயக்கம் மற்றும் ஏஐகேம் செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார். மாநில பொறுப்பாளர்கள் மாநில வேலை அறிக்கைகளை முன்வைத்தனர்.

ஏஐகேஎம் விவசாயிகள் மகாசபை, எஸ்கேஎம் போராட்டங்களில் ஊக்கமாக பங்கெடுக்கும் அதேவேளையில், மாநிலங்களில், மாவட்டங்களில் நிலம், நீர், வாழ்வாதாரம் சார்ந்த போராட்டங்களைத் தீவிரப்படுத்த முடிவு செய்தது. 2025 இறுதியில் தேசிய மாநாடு நடைபெற இருப்பதால், மாநில, மாவட்ட, ஒன்றிய அமைப்புகளை வலுப்படுத்தவும், உறுப்பினர் சேர்ப்பைத் தீவிரப்படுத்தவும் தேசிய கவுன்சில் முடிவு செய்தது.

### எஸ்கேஎம் போராட்டங்களில் ஏஐகேஎம்:

வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய மோடி அரசுக்கு எதிரானப் போராட்டங்களை, எஸ்கேஎம் ஐக்கிய விவசாயிகள் முன்னணி தீவிரப்படுத்துகிறது. கடந்த ஜூலை 31 ல், விவசாயிகள் விரோத, தொழிலாளர்கள் விரோத மோடி அரசின் பட்ஜெட்டிற்கு எதிராக , எஸ்கேஎம் நாடு முழுவதும் பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டத்தைக் கட்டமைத்தது. தமிழ்நாட்டில், பல்வேறு மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் நடைபெற்ற போராட்டத்தில் அகில இந்திய விவசாயிகள் மகாசபை தோழர்கள் திரளாக பங்கெடுத்துக் கொண்டனர்.

- ◆கார்ப்பரேட்டுகளே, விவசாயத்தை விட்டு வெளியேறு!
- ◆ ஒன்றிய அரசே, உலக வர்த்தக கழகத்தில் WTO வில் இருந்து வெளியேறு! விவசாய உற்பத்தி, வணிகத்தில் MNC பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிக்காதே!
- ◆ஆகியவற்றை வலியுறுத்தி, ஆகஸ்டு_9 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஏஐகேஎம் பங்கெடுத்துக் கொண்டது.
- ◆ மோடி ஆட்சிக்கு எதிரான விவசாயிகள் இயக்கம் ஆற்றல் பெற, ஏஐகேஎம் விவசாயிகள் மகாசபையை வலுப்படுத்துவோம் !

### தமிழ்நாடு வேலை அறிக்கையில் இருந்து:

விவசாயிகள் மகாசபை உறுப்பினர் இலக்கு 30,000 ஆகும். உறுப்பினர் சேர்க்கை, கிளைகள், மாவட்ட கட்டமைப்புகளை மறுசீரமைத்தல் துவங்கி நடைபெற்று வருகிறது. சேலம், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில், மாவட்ட ஊழியர்கள் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியில் அதிமுக அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட பழங்குடியினர் நிலங்களை மீட்பது, கள்ளக்குறிச்சி கல்ராயன் மலை பழங்குடியினர் நில உரிமைப் பிரச்னை, தஞ்சாவூர் மாவட்ட மடம் மற்றும் கோயில் நிலங்களில் சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகளுக்கான உரிமைப் பிரச்சினை, புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் பெருந்தோட்டம், நெப்பத்தூர் ஆகிய இடங்களில் தற்போது நடைபெற்று வரும் அனல்மின் சோலார் மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற பெரு நிறுவனங்களுக்கு எதிரான இயக்கம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர் கடன்கள் வழங்கப்படாதது மற்றும் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் ஊழல், மதுரை மாவட்டத்தில் பாசனப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஏழை, சிறு குறு, நடுத்தர விவசாயிகள் பிரச்சினைகள் மீது பரந்த விவசாயிகள் இயக்கத்தைக் கட்டமைக்கும் பணிகள் மாவட்ட அளவில் நடைபெற்று வருகின்றன.

# விலையைக் குறை, வேலை கொடு; முடியாவிட்டால் ஆட்சியை விட்டு வெளியேறு!

## அவிகிதொச தில்லிப் பேரணி!

மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள பாஜக மோடி, இம்முறையும் கிராமப்புர தொழிலாளர், வறியவர்களை புறக்கணித்துள்ளது; கார்ப்பரேட்டு களின் வளர்ச்சிக்காக மட்டுமே தன்னை அர்ப் பணித்துக் கொண்டுள்ளது. இதை, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் நிதிநிலை அறிக்கை நாட்டுக்கு தெளிவாக தெரிவித்துவிட்டது. இந்த வறியவர் விரோத, கார்ப்பரேட் மோடி ஆட்சிக்கு இந்தியாவின் கிராமப்புர தொழிலாளர், வறியவர்களின் அரசியல் சக்தியை காட்டும் வகையில் வரும் நவம்பரில், விலையைக் குறை, வேலை கொடு; முடியாவிட்டால் ஆட்சியை விட்டு வெளியேறு! என முழங்கி நாடாளு மன்றம் நோக்கி தொழிலாளர் பேரணி நடத்துவதென அவிகிதொச அழைப்பு விடுத்துள்ளது.

ஆகஸ்டு 4,5 நாட்களில் ஒடிஷா தலைநகர் புவனேஸ்வரில் கூடிய அனைத்திந்திய விவசாய, கிராமப்புர தொழிலாளர் சங்கத்தின் தேசிய பொதுக்குழு இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறது. பொதுக்குழு துவங்கும் முன் புவனேஸ்வர், நாகபூஷன் பவன் முன்புள்ள தோழர் நாகபூஷன் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து, அவிகிதொச முன்னாள் அகில இந்திய தலைவர் மறைந்த தலைவர் கிதிஷ் பிஸ்வால் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி, நக்சல்பாரி தலைவர்களுள் ஒருவரான சரோஜ் தத்தாவின் தியாகத்தை நினைவுகூர்ந்தது (ஆகஸ்ட் 5, சரோஜ் தத்தாவின் நினைவு நாள்).

நடந்த முடிந்த மக்களவைத் தேர்தல்கள் குறித்து விவாதித்த பொதுக்குழு பீகாரிலிருந்து வெற்றிபெற்று மக்களவை உறுப்பினராகியுள்ள தோழர்கள் ராஜாராம் சிங், சுதாமாபிரசாத் இருவருக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டது. பீகார், ஜார்க்கண்ட் மற்றுமுள்ள சில மாநில மக்களவைத் தொகுதிகளில் போட்டியிட்ட இகக(மாலெ) வேட்பாளர்களுக்கு பெரும் உற்சாகத்துடன் அணிதிரண்டு வாக்களித்த கிராமப்புர தொழிலாளர், வறியவர்களுக்கு பாராட்டுதல்களையும் பொதுக்குழு தெரிவித்தது.

தேர்தலுக்குப் பின் எழுந்துள்ள நாடு முழுவதுமான நிலமைகள் குறித்து கூட்டம் விவாதித்தது. வறியவர் விரோத கார்ப்பரேட் நிதிநிலை அறிக்கையை நிராகரித்து, தொழிலாளர், வறியவர்கள், பெண்கள், தலித்துகள், சிறுபான்மை மக்களுக்கான கோரிக்கைகளை வலியுறுத்தும் நாடு தழுவிய கிளர்ச்சிகள், இயக்கங்கள் நடத்துவதென முடிவு செய்தது. ஆகஸ்ட் 15 அன்று நாட்டின் ஜனாதிபதிக்கு கோரிக்கை மனுக்கள் அனுப்புவது, ஆகஸ்ட் 21 லிருந்து 23 வரை பீகாரில் மாபெரும் பரப்புரை இயக்கம் நடத்தப்பட உள்ளது. இதில் பீகார் அரசு, ஏழைக்குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் தருவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்பது வலியுறுத்தப்பட உள்ளது. இந்த இயக்கத்தில் இணைந்து கொள்கிற வகையில் மாநிலங்கள் அங்குள்ள முக்கிய பிரச்சனைகளுடன் ஆகஸ்ட் 23 அன்று சாத்தியமான வடிவங்களில் இயக்கம் நடத்தவும் அழைப்பு விடுத்தது. செப்டம்பர் 15 அன்று பெண் தொழிலாளர் கோரிக்கைகள் மீது பெண் தொழிலாளரை ஊராட்சி அளவில் அணிதிரட்டுவது (தமிழ்நாட்டில் செப்டம்பர் 13), செப்டம்பர் 23 அன்று மாவட்ட தலைநகரங்களில் பெருந்திரள் அணிதிரட்டல் நடத்துவது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் மோடி ஆட்சியை எதிர்த்து, அக்டோபர் 1 (காந்தி பிறந்தநாள் அக்டோபர் 2) அன்று ஊராட்சி அலுவலகங்கள் முன் பெருந்திரள் அணி திரட்டலை நடத்துவது, இவ்வாறு இந்த ஆண்டு இறுதிவரையிலும் பல வகைப்பட்ட பரப்புரை, கிளர்ச்சி தொடர் இயக்கங்களை நடத்துவதென்று முடிவு செய்தது. இயக்கத்தின் நிறைவாக, நவம்பரில் நாடாளுமன்றம் நோக்கிப் பேரணி நடத்துவதென்றும் பொதுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இந்தப் பரப்புரை இயக்கத்தில் விலைவாசி உயர்வுக்கேற்ப சம்பளம் வழங்கு; புல்டோசர் ஆட்சியை நிறுத்து, வீடு பெறும் உரிமையை சட்டபூர்வமாக்கு, தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் ஆண்டுக்கு 200 நாள் வேலை, நாளுக்கு ரூ 600 கூலி வழங்கு, வயதான தொழிலாளர், பெண்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ 5000 ஓய்வூதியம் பிற பொருத்தமான கோரிக்கைகளையும் வலியுறுத்த வேண்டும்; பிரபலப்படுத்திட வேண்டும். பல்லாயிரக்கணக்கில் பல லட்சங்களில் கிராமப்புர தொழிலாளர்களை, வறியவர்களை

ஈர்க்கும் உண்மையான வெகுமக்கள் இயக்கமாக மாற்றிட வேண்டும். நாடாளுமன்றம் நோக்கிய “தொழிலாளர் பேரணியை” வெற்றிகரமாக்கிட வேண்டுமென பொதுக்குழு அழைப்பு விடுத்தது.

இந்த நான்கு மாதகால இயக்கம் வாயிலாகவும் அதை தொடர்ந்த நடவடிக்கைகள் வாயிலாகவும் அடுத்து வரவுள்ள 8வது தேசிய மாநாட்டுக்குள் புதிதாக 300 மாவட்டங்கள், 3000 ஒன்றியங்கள், 5000 க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் அமைப்பையும் இயக்கத்தையும் விரிவுபடுத்துவதென்று திட்ட மிட்டது. அவிகிதொசவின் அடித்தளம், ஊராட்சி, ஒன்றிய அமைப்புகளாகும். எனவே இந்த அடித்தளத்தை வலுப்படுத்திட தீவிர முயற்சிகள் எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. மாவட்ட, மாநில மாநாடுகள் மூலம் உறுதிசெய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. பெண் செயல்வீரர்கள், தலைவர்களை வளர்க்கவும் இளைஞர்களை அமைப்புக்குள் பெரிய எண்ணிக் கையில் கொண்டு வரவும் சிறப்பு முயற்சிகள் எடுக்க வேண்டுமெனவும் பொதுக்குழு அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தியது.

## உள்ஒதுக்கீடு பற்றி அவிகிதொச

தலித் மக்களது உள்ஒதுக்கீடு பிரச்சனையில் மிகவும் கீழ்நிலையில் உள்ளவர்களை முன்னேற் றுகிற வகையில், அந்தப் பிரிவினருக்கு உரிய இட ஒதுக்கீட்டு ஏற்பாட்டை உச்சநீதிமன்றம் உறுதிப் படுத்தியுள்ளது. இதை உறுதியாக செயல்படுத்து வதற்கு சாதிவாரி கணக்கெடுப்பு தேவை என்பதையும் பொதுக்குழு வலியுறுத்தியது. அதேசமயம் இதை பயன்படுத்திக் கொண்டு, பாஜக அரசியல் விளையாட்டு விளையாடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று பொதுக்குழு எச்சரித்தது. முதல் தலைமுறை அல்லது ஒரு முறை மட்டும் இட ஒதுக்கீடு எனும் ‘வசதிபடைத்தப் பிரிவினர்’ அணுகுமுறையை பொதுக்குழு நிராகரித்து தீர்மானம் நிறைவேற்றியது.

கூட்டத்தை, தேசிய தலைவர்கள் ஸ்வதேஷ், சத்தியதேவ்ராம், ஸ்ரீராம் சவுத்ரி, பொதுச் செயலாளர் திரேந்திர ஜா ஆகியோர் வழி நடத்தினர்.

பொதுக்குழுக் கூட்டத்தில், தமிழ்நாட்டி லிருந்து என். குணசேகரன், ஈஸ்வரி, வீ மூ.வளத்தான், மாசிலாமணி, சி.ராஜசங்கர், பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். ❑

-சி.ராஜசங்கர்



அவிகிதொச தேசிய குழுக் கூட்டம், புவனேஸ்வரம்


அவிகிதொச மாநில செயற்குழுக் கூட்டம், கந்தவர்க்கோட்டை



அகில இந்திய விவசாயிகள் மகாசபை தேசியக் கவுன்சில், மான்சா, பஞ்சாப்

– தொடர்ச்சி 22ம் பக்கம்...

அதிகாரமற்றவர்களாக்கி வனங்களையும் சுற்றுச் சூழலையும் பேரழிவுக்குட்படுத்தி இலாபம் தேடும் முதலாளித்துவத்தை முன்னேற்றுவதையே இந்திய அரசாங்கத்தின் பொறுப்பற்ற பருவநிலைக் கொள்கை காட்டுகிறது. சுற்றுச்சூழல் செயல்பாட்டுக் குறியீடு 2020 இல், 180 நாடுகளுள் 178 வது இடத்தை பெற்றுள்ள ஆப்கானிஸ்தான் தவிர, அனைத்து தெற்காசிய நாடுகளுக்கும் பின்னால், இந்தியா 168 வது இடத்திலுள்ளது. ( தொடரும்... )

## புதுச்சேரி மாநில என்ஆர் காங்கிரஸ் பாஜக ஆட்சியின் மக்கள் விரோத பட்ஜெட்டிற்கு எதிராக இடதுசாரிகள் விசிக கண்டனப் பேரணி




புதுச்சேரி சட்டசபையில் அண்மையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதில் மக்கள் நலத்திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. அதிகரித்து வரும் வேலையின்மை, வருவாய் இழப்பு, விவசாய நெருக்கடி உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்தவிதத் திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை. இந்த மக்கள் விரோத பட்ஜெட்டை கண்டித்து 12.8.2024 சட்டமன்றம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் சட்டமன்றம் நோக்கி கண்டனப் பேரணி சிபிஐ, சிபிஎம், சிபிஐஎம்எல் மற்றும் விசிக சார்பாக நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சலீம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் ராஜாங்கம், சிபிஐஎம்எல் மாநில செயலாளர் புருஷோத்தமன் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முதன்மை செயலாளர் தேவபொழிலன் தலைமையில் காமராஜர் சிலை அருகிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு புதுச்சேரி சட்டமன்றம் நோக்கிச் சென்றனர். நேருவீதி, மிஷன்வீதி வழியாக மாதா கோவில் வீதியை அடைந்தபோது காவல்துறை தடுத்து நிறுத்தியது. ஆகையால் அந்த இடத்திலேயே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ❑

– 18ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படுத்த கூட்டங்கள் நடத்தவும் உறுதிமொழி ஏற்கச் செய்யவும் வேண்டும்.

5. பெண் தொழிலாளர்கள் தங்கள் மீதான ஒடுக்குமுறைகள் பற்றி புகார் கொடுக்க முன்வரும்போது பெயர், ஊர் போன்ற அடையாளங்கள் கேட்கப்படக் கூடாது. புகார் பெட்டி அருகில் கண்காணிப்பு கேமரா இருக்கக் கூடாது.

மற்ற பிரதிநிதிகளும் அவர்களது முன்மொழிவுகளை முன் வைத்தனர். அனைவருமே தொழிலாளர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும், பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் பேசினர். இந்தப் பட்டறையில் முன் வைக்கப்பட்ட செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என்ற முழக்கத்தோடு சர்வதேச தொழிலாளர் அமைப்பும், அய்.நா.பெண்கள் அமைப்பும் உருவாக்கிய ஜவுளித் தொழில் கூட்டணியின் திட்ட வடிவமைப்பு பட்டறை முடிவுற்றது.

**– கிருஷ்ணவேணி**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.08.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# ஒன்றிய மோடி அரசின் மக்கள் விரோத குற்றவியல் சட்டங்கள், தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத சட்டங்களுக்கு எதிராக....




எஸ்கேம்-ஏஜகேஎம்




நெல்லை



தென்காசி




தர்மபுரி



தூத்துக்குடி



மதுரை




சேலம்

Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh